LIFCO

।। श्री शिवसहस्रनाम स्तोत्रम् ।।

(श्री रुद्रयामल अन्तर्गतम्)

ஸ்ரீ சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

(ஸ்ரீ ருத்ரயாமல அந்தர்கதம்)

சிவஞான போதினி என்னும் தமிழ் உரை

உ

शिवमयम्/ ஶ்ரீ ஶிவமயம்

श्री महादेव जयम्/ ஶ்ரீ மஹாதே³வ ஜயம்

॥ श्री शिवसहस्रनाम स्तोत्रम् ॥

॥ ஶ்ரீ ஶிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ॥

(श्री रुद्रयामल अन्तर्गतम्/ *ஶ்ரீ ருத்³*ரயாமல அந்தர்க³தம்)

சிவஞான போதினி என்னும் தமிழ் உரை

உரையாசிரியர்

ஞான பாஸ்கர, ஶிவோத்கர்ஷவர்ஷக, பிரம்மஶ்ரீ

P.N. நாராயண சாஸ்திரிகள்

பதிப்பகத்தார்

லிப்கோ பப்ளிஷர்ஸ் (பி) லிட்

புதிய எண். 36, வடக்கு சாலை, மேற்கு சி.ஐ.டி. நகர், சென்னை-600 035.
தொலைபேசி: 2434 1538, 2433 6467
E-mail: info@lifcobooks.com • Website: www.lifcobooks.com

லிப்கோ புத்தகங்கள் கீழ்காணும் இடங்களிலும் கிடைக்கும்

கிளைகள்

எண். 17/1, நந்திகோயில் தெரு,
தெப்பகுளம்,
திருச்சி-620 002
போன்: 0431-2717726

எண். 50-51,
கிழக்கு சாரங்கபாணி தெரு,
கும்பகோணம்-612 001
போன்: 0435-2424467 / 96777 34567

எண். 17/1, புதிய எண். 32, ராமநாதன் தெரு,
தி.நகர், சென்னை-600 017
(ஷிர்டி சாய்பாபா கோவில் எதிரில்
-ராமேஸ்வரம் தெரு)
போன்: 044-2434 1677

புத்தக விற்பனையாளர்கள்

சாய் உமாலக்ஸ் வென்சுர்ஸ்
புதிய எண். 5, பழைய எண். 2,
தெற்கு தண்டபாணி தெரு,
தி.நகர், சென்னை-600 017
போன்: 044-2434 8324

ஐஸ்வர்யாஸ் டிரேடர்ஸ்
சீனிவாஸா நகர்,
191, திருஞான சம்பந்தர் தெரு,
மடிப்பாக்கம், சென்னை-600 091
போன்: 99401 33256

ஹோட்டல் ராயல் பார்க்
செம்மா மடம்,
ராமநாதபுரம் ஹைவே,
ராமேஸ்வரம்-623 526
போன்: 04573-221680

விலை: ரூ.50/-

முதற்பதிப்பு : 2013 (Revised Edition)
மறு அச்சு : 2016
பதிப்புரிமை பதிப்பகத்தாரைச் சார்ந்தது

Typeset by Chengamalam Enterprises, Chennai.
Printed at Sankar Printers (P) Ltd, Chennai - 42.

முன்னுரை

வேதங்கள் எங்கும் நிறைந்த இரண்டற்ற பரம்பொருளைத் தன்னுள்ளேயே பிரம்ம சாக்ஷாத்காரம் பெற்று விளங்க வேண்டும் எனக் கூறுகின்றன. இந்த நிலையினை எட்ட முடியாதவர்களுக்கு உருவ வழிபாட்டையும் கூறுகின்றன. உருவங்களில் ஆதிசங்கர பகவத்பாதாசாரியர்கள் வகுத்துக் கொடுத்த ஆறு சமய வழிபாடுகள் ஆறு கடவுள்களைப் பிரதானமாகக் கொண்டவை. அவை முறையே கணபதி, முருகன், பரமேச்வரன், அம்பிகை, திருமால், சூரியன் என்ற ஆறு ஆகும். இந்த ஆறு தெய்வங்களையும் வேதம் பேசியிருக்கிறது என்றாலும் மங்களமூர்த்தியான பரமேச்வரனையே எல்லாவற்றிற்கும் மேலானவராக, உலகத்தைக் கடந்தவராக, மங்களத்தை வாரி வழங்குபவராகப் பேசியிருக்கிறது. கிருஷ்ண யஜுர்வேதம், தைத்திரீய ஸம்ஹிதை, நாலாவது காண்டம், ஐந்தாவது பிரச்னம் முழுவதும் ருத்ரரூபியான பரமேச்வரனைப் புகழ்ந்து பேசியிருக்கிறது. இம்மாதிரி ஒரு பிரச்னம் முழுவதும் வேறு எந்தத் தெய்வத்துக்கும் சொல்லப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் ஆறாவது காண்டம் இரண்டாவது பிரச்னத்தில் திரிபுரஸம்ஹார வரலாறு நன்கு வர்ணிக்கப்பட்டுள்ளது. தைத்திரிய ஆரண்யகம் பத்தாவது பிரச்னத்தில் நிறைய சிவபரமாய் மந்திரங்கள் உலகத்துக்கு மேற்பட்டவனாயும் எங்கும் நிறைந்திருப்பவனாகவும் மஹரிஷி, ருத்திரன், மஹேச்வரன் என்றெல்லாம் பாடியிருக்கிறது. பாரதம், ராமாயணம் முதலிய இதிஹாஸங்கள், ஸ்காந்தம் முதலிய பதினெட்டு புராணங்கள், சைவ ஆகமங்கள் முதலியனவெல்லாம் சிவபரத்துவத்தைப் பற்றி மிகவும் விரிவாகவே பேசியிருக்கின்றன. ஆகவே, சிவ வழிபாடு

எல்லாவற்றிலும் சிறந்தது என்பது பெறப்பட்டது. சிவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரங்கள் பல இருக்கின்றன. வேத மந்திரங்களாலேயே 'ருத்ரத்ரிசதி' என்ற பெயரால் முன்னூறு அர்ச்சனைகள் உள்ளன. மற்ற எக்கடவுளுக்கும் இத்தகைய உயர்ந்த ஸ்தானம் வேதத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. மிக அரியதாக ஒரு சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்துக்கு உரை எழுத அவன் அருளை வேண்டித் தொடங்குகின்றேன்.

உ

शिवमयम्/ஶ்ரீ ஶிவமயம்

श्री महादेव जयम्/ஶ்ரீ மஹாதே³வ ஜயம்

பூர்வ பாகம்

வியாஸ முனிவரின் சீடரும் புராணங்கள் சொல்லுவதில் சிறந்தவருமான சூத முனிவரைப் பார்த்து மஹரிஷிகள் எல்லோரும் வேண்டிக் கொண்டனர்.

श्री गणेशाय नमः

ஶ்ரீ க³ணேஶாய நம꞉

ऋषय ऊचुः—

सूत वेदार्थतत्त्वज्ञ शिवध्यानपरायण ।

मुक्त्युपायं वदास्माकं कृपालो मुनिसत्तम ॥ १ ॥

ரிஷய ஊசு꞉—

ஸூத வேதா³ர்த்த²தத்வஜ்ஞ ஶிவத்⁴யாநபராயண ।

முக்த்யுபாயம் வதா³ஸ்மாகம் க்ருபாலோ முநிஸத்தம ॥ 1 ॥

कः सेव्यः सर्वदेवेषु को वा जाप्यो मनुः सदा ।

स्थातव्यं कुत्र वा नित्यं किं वा सर्वार्थसाधकम् ॥ २ ॥

க꞉ ஸேவ்ய꞉ ஸர்வதே³வேஷு கோ வா ஜாப்யோ மநு꞉ ஸதா³ ।

ஸ்தா²தவ்யம் குத்ர வா நித்யம் கிம் வா ஸர்வார்த்த²ஸாத⁴கம் ॥ 2 ॥

சூத முனிவரே! வேதப் பொருளின் தத்துவத்தை உணர்ந்தவரே, சிவத்தியானபரராய் விளங்குபவரே! முக்தியுபாயத்தை எங்களுக்குக் கிருபையுடன் கூறி அருள வேண்டும். எல்லாத் தேவர்களுக்குள்ளும் எவர் சேவிக்கத் தக்கவர், எப்பொழுதும் எந்த மந்திரம் ஜபிக்க வேண்டும்? எவ்விடத்தில் வசித்தால் விரும்பிய எல்லாம் கிடைக்கும்?

सूत उवाच—
धन्यान्मन्यामहे नूनमनन्यशरणान्मुनीन् ।
वन्याशिनो वनावासान्नयस्तमन्यूनकल्मषान् ॥ ३ ॥

ஸூத உவாச—
த^{4}ந்யாந்மந்யாமஹே நூநமநந்யஶரணாந்முநீந் ।
வந்யாஶிநோ வநாவாஸாந்நயஸ்தமந்யூநகல்மஷாந் ॥ 3 ॥

भवद्भिः सर्ववेदार्थतत्त्वं ज्ञातमकल्मषैः ।
परात्परतरः शर्वः सर्वदा पूज्यते धिया ॥ ४ ॥

ப^{4}வத்^{3}பி^{4}: ஸர்வவேதா^{3}ர்த்த^{2}தத்வம் ஜ்ஞாதமகல்மஷை: ।
பராத்பரதர: ஶர்வ: ஸர்வதா^{3} பூஜ்யதே தி^{4}யா ॥ 4 ॥

भवद्भिः सर्ववेदार्थो ज्ञात एवास्ति यद्यपि ।
तथापि किंचिद्वक्ष्यामि यथा ज्ञातं मया तथा ॥ ५ ॥

ப^{4}வத்^{3}பி^{4}: ஸர்வவேதா^{3}ர்த்தோ^{2} ஜ்ஞாத ஏவாஸ்தி யத்^{3}யபி ।
ததா^{2}பி கிஞ்சித்^{3}வக்ஷ்யாமி யதா^{2} ஜ்ஞாதம் மயா ததா^{2} ॥ 5 ॥

ஸூதர் பதில் கூறுகிறார்: காட்டிலேயே வசித்து, அங்குக் கிடைப்பவைகளையே உணவாகக் கொண்டு, பாபமற்றவர்களாகவும், ஸகலமான வேதங்களின் பொருள்களை அறிந்தவர்களாகவும் இருந்து கொண்டு எல்லாவற்றுக்கும் மேலானவரான சிவபெருமானையே பூஜித்து வருகிறீர்கள். இருந்தும் நானறிந்த வரையில் கொஞ்சம் கூறுகிறேன்.

पुरा कैलासशिखरे सुखासीनं जगत्प्रभुम् ।
वेदान्तवेद्यमीशानं शङ्करं लोकशङ्करम् ॥ ६ ॥

புரா கைலாஸஶிக^{2}ரே ஸுகா^{2}ஸீநம் ஜக^{3}த்ப்ரபு^{4}ம் ।
வேதா^{3}ந்தவேத்^{3}யமீஶாநம் ஶங்கரம் லோகஶங்கரம் ॥ 6 ॥

विश्वतश्चक्षुषं देवं विश्वतोमुखमव्ययम् ।
विश्वतोबाहुमाराध्यं विश्वतः पादमीश्वरम् ॥ ७ ॥

விஶ்வதஶ்சக்ஷுஷம் தே3வம் விஶ்வதோமுக2மவ்யயம் ।
விஶ்வதோபா3ஹுமாராத்4யம் விஶ்வத: பாத3மீஶ்வரம் ॥ 7 ॥

निष्कलं निर्गुणं शान्तं निरवद्यं निरामयम् ।
निष्प्रपञ्चं निराकारं निर्मलं निरुपाधिकम् ॥ ८ ॥

நிஷ்கலம் நிர்கு3ணம் ஶாந்தம் நிரவத்3யம் நிராமயம் ।
நிஷ்ப்ரபஞ்சம் நிராகாரம் நிர்மலம் நிருபாதி4கம் ॥ 8 ॥

शर्वं प्रसन्नवदनं सर्वाभरण भूषितम् ।
गौरीभूषितवामाङ्गं ब्रह्मविष्ण्वादि सेवितम् ॥ ९ ॥

ஶர்வம் ப்ரஸந்நவத3நம் ஸர்வாப4ரண பூ4ஷிதம் ।
கௌ3ரீபூ4ஷிதவாமாங்க3 ப்3ரஹ்மவிஷ்ண்வாதி3 ஸேவிதம் ॥ 9 ॥

अप्रमेयं जगज्जन्मस्थितिसंहारकारणम् ।
सोमसूर्याग्निनयनं सोमार्धकृतशेखरम् ॥ १० ॥

அப்ரமேயம் ஜக3ஜ்ஜந்மஸ்தி2திஸம்ஹாரகாரணம் ।
ஸோமஸூர்யாக்3நிநயநம் ஸோமார்த4க்ருதஶேக2ரம் ॥ 10 ॥

बिल्वचन्दनलिप्तांगं नवबिल्वदलार्चितम् ।
व्याघ्रचर्मपरीधानमनन्तेन्दुरविप्रभम् ॥ ११ ॥

பி3ல்வசந்த3நலிப்தாங்க3ம் நவபி3ல்வதலா3ர்ச்சிதம் ।
வ்யாக்4ரசர்மபரீதா4நமநந்தேந்து3ரவிப்ரப4ம் ॥ 11 ॥

नानामणिगणाकीर्णं किरीटकटकावृतम् ।
दयासुधार्द्रनयनं वरदाभयपाणिनम् ॥ १२ ॥

நாநாமணிக3ணாகீர்ணம் கிரிடகடாகாவ்ருதம் ।
த3யாஸுதா4ர்த்3ரநயநம் வரதா3ப4யபாணிநம் ॥ 12 ॥

नित्यसंतोषपूर्णाङ्गमुपालिङ्गितविग्रहम् ।
विलोक्यातीव संतुष्टः षण्मुखः साम्बमीश्वरम् ॥ १३ ॥

நித்யஸந்தோஷபூர்ணாங்க3முபாலிங்கி3தவிக்3ரஹம் ।
விலோக்யாதீவ ஸந்துஷ்டஃ ஷண்முக2ஃ ஸாம்ப3மீஶ்வரம் ॥ 13 ॥

मत्वा कृतार्थमात्मानं प्रणिपत्य सदाशिवम् ।
पप्रच्छ सर्वलोकानां मुक्त्युपायं कृताञ्जलिः ॥ १४ ॥

மத்வா க்ருதார்த்த2மாத்மாநம் ப்ரணிபத்ய ஸதா3ஶிவம் ।
பப்ரச்ச2 ஸர்வலோகாநாம் முக்த்யுபாயம் க்ருதாஞ்ஜலிஃ ॥ 14 ॥

षण्मुख उवाच—
विश्वेश्वरमहादेव विष्णुब्रह्मादिवन्दित ।
देवानां मानवानां च किं मोक्षस्यातिसाधनम् ॥ १५ ॥

ஷண்முக2 உவாச—
விஶ்வேஶ்வரமஹாதே3வ விஷ்ணுப்3ரஹ்மாதி3வந்தி3த ।
தே3வாநாம் மாநவாநாம் ச கிம் மோக்ஷஸ்யாதிஸாத4நம் ॥ 15 ॥

तव नामान्यनन्तानि सन्ति यद्यपि शङ्कर ।
तथापि तानि दिव्यानि न ज्ञायन्ते मयाऽधुना ॥ १६ ॥

தவ நாமாந்யநந்தாநி ஸந்தி யத்3யபி ஶங்கர ।
ததா2பி தாநி தி3வ்யாநி ந ஜ்ஞாயந்தே மஹாऽது4நா ॥ 16 ॥

प्रियाणि तव नामानि सर्वाणि शिव यद्यपि ।
तथापि कानि रम्याणि तेषु प्रियतमानि ते ॥ १७ ॥

ப்ரியாணி தவ நாமாநி ஸர்வாணி ஶிவ யத்3யபி ।
ததா2பி காநி ரம்யாணி தேஷு ப்ரியதமாநி தே ॥ 17 ॥

तानि सर्वार्थदान्यद्य कृपया वक्तुमर्हसि ।
यन्नाम स्मरणादेव सद्यो मुच्येत पातकैः ॥ १८ ॥

தாநி ஸர்வார்த்த2தா3ந்யத்3ய க்ருபயா வக்துமர்ஹஸி ।
யந்நாம ஸ்மரணாதே3வ ஸத்3யோ முச்யதே பாதகைঃ ॥ 18 ॥

திருக்கயிலாய சிகரத்தில் முன்பு ஒரு சமயம் வேதாந்தங்களால் அறியத் தக்கவரும், உலகத்துக்கு எப்பொழுதும் நன்மையையே செய்பவரும், எங்கும் நிறைந்தவைகளான முகம், கண்கள், கை, கால்கள் இவைகளோடு கூடியவரும், முக்குணங்களுக்கு அப்பாற்பட்டவரும், உலகத்துக்கு மேற்பட்டவரும், அருள் நிறைந்த முகத்தோடு கூடிய கௌரீ தேவியுடன் உடன் வீற்றிருப்பவருமான, பரமேச்வரனை ஆறுமுகக் கடவுள் வணங்கி, முக்திக்கு ஒரு வழியை உபதேசிக்கும்படி வேண்டிக் கொண்டார். தங்களுடைய நாமங்கள் முடிவற்றவை. அவைகள் எனக்குத் தெரியவில்லை. தங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியவையும், வேண்டியவர்க்கு வேண்டியவெல்லாம் வழங்கக் கூடியவைகளுமான அந்த நாமங்களை எனக்குக் கூறியருள வேண்டும். அவைகளை நினைத்தாலே பாபக் கூட்டங்கள் மறைந்து விடும்.

रसना रससारज्ञा त्वन्नामामृतपायिनी ।
यस्यास्ति स पुमान् धन्यो मान्यो हि मनुजैरपि ॥ १९ ॥

ரஸநா ரஸஸாரஜ்ஞா த்வந்நாமாம்ருதபாயிநீ ।
யஸ்யாஸ்தி ஸ புமாந் த4ந்யோ மாந்யோ ஹி மநுஜைரபி ॥ 19 ॥

जन्मान्तरसहस्रेषु तप्तं यदि तपस्तदा ।
त्वन्नामस्मरणासक्तं चित्तं जन्तोः प्रजायते ॥ २० ॥

ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு தப்தம் யதி3 தபஸ்ததா3 ।
த்வந்நாமஸ்மரணாஸக்தம் சித்தம் ஜந்தோঃ ப்ரஜாயதே ॥ 20 ॥

महेशनामामृतदिव्यधारापरिप्लुताङ्गो ध्वनिमध्यगोऽपि ।
न शोकमाप्नोति नरो यतोऽहं संरक्षितो वह्निगतः शिवेन ॥ २१ ॥

மஹேஶநாமாம்ருததி3வ்யதா4ராபரிப்லுதாங்கோ3
த்4வநிமத்4யகோ3ऽபி ।
ந ஶோகமாப்நோதி நரோ யதோऽஹம் ஸம்ரக்ஷிதோ வஹ்நிக3த:
ஶிவேந ॥ 21 ॥

यतो विभूतिकवचाः शिवनामस्त्रपाणयः ।
चत्वार एव याम्याश्च चक्रुर्युद्धं पुरा मुदा ॥ २२ ॥

யதோ விபூ4திகவசா: ஶிவநாமஸ்த்ரபாணய: ।
யத்வார ஏவ யாம்யாஶ்ச சக்ருர்யுத்3த4ம் புரா முதா3 ॥ 21 ॥

ब्रह्महत्यासहस्राणि पुरा कृत्वापि पुल्कसः ।
शिवेति नाम विपुलं श्रुत्वा मोक्षं गतः पुरा ॥ २३ ॥

ப்3ரஹ்மஹத்யாஸஹஸ்ராணி புரா க்ருத்வாபி புல்கஸ: ।
ஶிவேதி நாம விபுலம் ஶ்ருத்வா மோக்ஷங் க3த: புரா ॥ 23 ॥

एतेऽपि प्रमथाः शुद्धाः शिवनामामृताशनाः ।
इन्द्राद्यचिन्त्यपादाब्जा वसन्ति शिवसन्निधौ ॥ २४ ॥

ஏதேபி ப்ரமதா2: ஶுத்3தா4: ஶிவநாமாம்ருதாஶநா: ।
இந்த்3ராத்3யசிந்த்யபாதா3ப்3ஜா வஸந்தி ஶிவஸந்நிதௌ4 ॥ 24 ॥

शिवनामैव संसारमहारोगैक शामकम् ।
नान्यत्संसाररोगस्य शामकं दृश्यते मया ॥ २५ ॥

ஶிவநாமைவ ஸம்ஸாரமஹாரோகை3க ஶாமகம் ।
நாந்யத்ஸம்ஸாரரோக3ஸ்ய ஶாமகம் த்3ருஶ்யதே மயா ॥ 25 ॥

शिवशङ्कर विश्वेश महादेवेति यन्मया ।
पूर्वमुच्चरितं युद्धे जयस्तेनाभवन्मम ॥ २६ ॥

ஶிவஶங்கர விஶ்வேஶ மஹாதே3வேதி யந்மயா ।
பூர்வமுச்சரிதம் யுத்3தே4 ஜயஸ்தேநாப4வந்மம ॥ 26 ॥

शङ्करेति महेशेति नामदिव्यं महावने ।
पुराकृतं पिशाचेन ततस्तस्मात्स मोचितः ॥ २७ ॥

ஶங்கரேதி மஹேஶேதி நாமதி3வ்யம் மஹாவநே ।
புராக்ருதம் பிஶாசேந ததஸ்தஸ்மாத்ஸ மோசிதః ॥ 27 ॥

समस्तवेदवेदान्तसारभूतं शिवप्रदम् ।
शिवनामामृतं दिव्यं पेयं सर्वार्थसाधकम् ॥ २८ ॥

ஸமஸ்தவேத3வேதா3ந்தஸாரப்4ருதம் ஶிவப்ரத3ம் ।
ஶிவநாமாம்ருதம் தி3வ்யம் பேயம் ஸர்வார்த்த2ஸாத4கம் ॥ 28 ॥

ये संततं शङ्करमादरेण मनः सरोजासनसन्निविष्टम् ।
ध्यायन्ति शम्भुं स्मरणानुसक्तास्त एव धन्याः शिवसम्मताश्च ॥२९॥

யே ஸந்ததம் ஶங்கரமாத3ரேண மநः ஸரோஜாஸநஸந்நிவிஷ்டம் ।
த்4யாயந்தி ஶம்பு4ம் ஸ்மரணாநுஸக்தாஸ்த ஏவ த4ந்யாः
ஶிவஸம்மதாஶ்ச ॥ 29 ॥

शिवनामामृताप्लुष्टरसनाः शिवपूजकाः ।
शिवध्यानरता नित्यं सन्ति धन्याः क्वचित् क्वचित् ॥ ३० ॥

ஶிவநாமாம்ருதாப்லுஷ்டரஸநாः ஶிவபூஜகாः ।
ஶிவத்4யாநரதா நித்யம் ஸந்தி த4ந்யாः க்வசித் க்வசித் ॥ 30 ॥

பல பிறவிகளில் செய்திருக்கும் தவத்தினால் மட்டுமே உங்களது திருநாமங்களில் பக்தி ஏற்படும். சிவநாமமெனும் அம்ருதத்தால் நனைக்கப்பட்ட ஒருவன் துன்பத்தை அடைய மாட்டான். ஒரு புலையன் விபூதி, சிவ நாமம் இவைகளைத் துணையாகக் கொண்டே யம தூதர்களையும் ஜயித்து விட்டான்.

சிவ கணங்களும் அந்த நாமத்தின் பெருமையாலேயே தம் நிலையில் உள்ளன. பிறவி என்னும் பெரும் பிணிக்குச் சிவநாமமே சிறந்த மருந்து. சிவ, சங்கர, விச்வேச, மஹாதேவ என்னும் இந்த நாமாக்களைச் சொல்லியே யுத்தத்தில் வெற்றியடைந்தேன். அம்ருதமயமானதும், ஸமஸ்த வேத வேதாந்தங்களின் ஸாரபூதமாயிருப்பதும், மங்களகரமானதுமான திவ்யமான சிவ நாமங்களைச் சொல்லியும், பூஜை செய்தும், தியானம் செய்தும் பலர் பிறவிப் பயனை அடைந்துள்ளனர்.

इत्युक्त्वा वेपमानाङ्गः प्रणिपत्यं पुनः शिवम् ।
कुमारः पार्श्वतस्तस्थौ नतमूर्धा कृताञ्जलिः ॥ ३१ ॥

இத்யுக்த்வா வேபமாநாங்க3 ப்ரணிபத்யம் புநஃ ஶிவம் ।
குமாரஃ பார்ஶ்வதஸ்தஸ்தௌ2 நதமூர்தா4 க்ருதாஞ்ஜலிஃ ॥ 31 ॥

कुमारोदीरितां वाचं सर्वलोकहितावहाम् ।
श्रुत्वा प्रसन्नवदनस्तमुवाच सदाशिवः ॥ ३२ ॥

குமாரோதீ3ரிதாம் வாசம் ஸர்வலோகஹிதாவஹாம் ।
ஶ்ருத்வா ப்ரஸந்நவத3நஸ்தமுவாச ஸதா3ஶிவஃ ॥ 32 ॥

श्रीशिव उवाच—

साधु साधु कुमाराद्य सम्यक् पृष्टं त्वयाऽधुना ।
यदिदानीं त्वया पृष्टं एद्वक्ष्ये शृणु सादरम् ॥ ३३ ॥

ஶ்ரீஶிவ உவாச—

ஸாது4 ஸாது4 குமாராத்3ய ஸம்யக் ப்ருஷ்டம் த்வயாऽது4நா ।
யதி3தா3நீம் த்வயா ப்ருஷ்டம் ஏத்3வக்ஷ்யே ஶ்ருணு ஸாத3ரம் ॥ 33 ॥

एवमेव पुरा गौर्या पृष्टः काश्यामहं तदा ।
समाख्यातं मया सम्यक् सर्वेषां मोक्षसाधनम् ॥ ३४ ॥

ஏவமேவ புரா கௌ3ர்யா ப்ருஷ்டஃ காம்யாமஹம் ததா3 ।
ஸமாக்2யாதம் மயாக ஸம்யக் ஸர்வேஷாம் மோக்ஷஸாத4நம் ॥ 34 ॥

இவ்வாறு முருகன் கூறிவிட்டுக் கைகூப்பித் தந்தையான சிவபெருமானை வணங்கிப் பக்கத்தில் நின்றார்.

சிவபிரான் கூறியருளினார்: முருகா! இப்பொழுது நீ கேட்டது மிகவும் நல்லது, அதைக் கூறுகிறேன். இம்மாதிரியே முன்பு காசி நகரத்தில் கௌரீ தேவியினால் கேட்டுக் கொள்ளப் பட்டு எல்லோருக்கும் மோக்ஷத்தைக் கொடுக்கக் கூடிய இதனைச் சொன்னேன்.

दिव्यान्यनन्तनामानि सन्त्विदं मध्यगं परम् ।
अष्टोत्तरसहस्रं तु नाम्नां प्रियतरं मम ॥ ३५ ॥

தி3வ்யாந்யநந்தநாமாநி ஸந்த்விதம்3 மத்4யகம்3 பரம் ।
அஷ்டோத்தரஸஹஸ்ரம் து நாம்நாம் ப்ரியதரம் மம ॥ 35 ॥

என்னுடைய ஆயிரம் நாமாக்களுக்குள் ஒன்றைச் சொன்னாலே ஸகலமும் கிடைத்து விடும். ஆயிரத்தையும் படிப்பவர்களுக்குக் கிடைக்கும் நற்பயன்களை என்னால் கூடக் கணக்கிட முடியாது.

एकैकमेव तन्मध्ये नाम सर्वार्थसाधकम् ।
मयापि नाम्नां सर्वेषां फलं वक्तुं न शक्यते ॥ ३६ ॥

ஏகைகமேவ தந்மத்4யே நாம ஸர்வார்த்த2ஸாத4கம் ।
மயாபி நாம்நாம் ஸர்வேஷாம் ப2லம் வக்தும் ந ஶக்யதே ॥ 36 ॥

तिलाक्षतैर्बिल्वपत्रैः कमलैः कोमलैः शुभैः ।
पूजयिष्यति मां भक्त्या यस्त्विदं नामसंख्यया ॥ ३७ ॥

திலாக்ஷதைர்பி3ல்வபத்ரைஃ கமலைஃ கோமலைஃ ஶுபை4ஃ ।
பூஜயிஷ்யதி மாம் ப4க்த்யா யஸ்த்விதம்3 நாமஸங்க்2யயா ॥ 37 ॥

स पापेभ्यः संसृतेश्च मुच्यते नात्र संशयः ।
ततो ममान्तिकं याति पुनरावृत्तिदुर्लभम् ॥ ३८ ॥

ஸ பாபேப்4யஃ ஸம்ஸ்ருதேஶ்ச முச்யதே நாத்ர ஸம்ஶயஃ ।
ததோ மமாந்திகம் யாதி புநராவ்ருத்திது3ர்லப4ம் ॥ 38 ॥

एकैकेनैव नाम्ना मामर्चयित्वा दृढव्रताः ।
श्रेष्ठं फलं प्राप्नुवन्ति सत्यमेवोच्यते मया ॥ ३९ ॥

ஏகைகநைவ நாம்நா மாமர்சயித்வா த்3ருட4வ்ரதாஃ ।
ஶ்ரேஷ்டம் ப2லம் ப்ராப்நுவந்தி ஸத்யமேவோச்யதே மயா ॥ 39 ॥

यस्त्विदं नामभिः सम्यक् त्रिकालं वत्सरावधि ।
मामर्चयतिनिर्दम्भः स देवेन्द्रो भविष्यति ॥ ४० ॥

யஸ்த்வித3ம் நாமபி4ஃ ஸம்யக் த்ரிகாலம் வத்ஸராவதி4 ।
மாமர்சயதிநிர்த3ம்ப4ஃ ஸ தே3வேந்த்3ரோ ப4விஷ்யதி ॥ 40 ॥

எவனொருவன் எள் கலந்த அக்ஷதைகளாலும் அழகான வில்வம், தாமரை மலர் இவைகளாலும் இந்த நாமங்களைக் கொண்டு பூஜிப்பானோ, அவன் பாபக் கூட்டங்களினின்றும், பிறவிக் கடலினின்றும் விடுபட்டு நிச்சயமாக என் சமீபம் வந்தடைவான். ஒரு நாமாவினால் பூஜித்தால் கூட நற்பயனை அடைவான். எவனொருவன் இந்த ஆயிரம் நாமங்களால் ஒரு வருஷகாலம் தினமும் மூன்று முறை அருச்சனை செய்கின்றானோ அவன் தேவராஜனாகவே ஆகி விடுகிறான்.

एतन्नामानुपन्धाननिरतः सर्वदा मुदा ।
मम प्रियतरस्तस्मिन् निवसाम्यहमादरात् ॥ ४१ ॥

ஏதந்நாமாநுபந்தா4நநிரதஃ ஸர்வதா3 முதா3 ।
மம ப்ரியதரஸ்தஸ்மிந் நிவஸாம்யஹமாத3ராத் ॥ 41 ॥

तत्पूजया पूरितोऽहं स एवाऽहं मतो मम ।
तस्मात् प्रियतरं स्थानमन्यन्नैव हि दृश्यते ॥ ४२ ॥

தத்பூஜயா பூரிதோऽஹம் ஸ ஏவாऽஹம் மதோ மம ।
தஸ்மாத் ப்ரியதரம் ஸதா^{2}நமந்யந்நைவ ஹி த்^{3}ருஶ்யதே ॥ 42 ॥

எப்பொழுதும் இந்தத் திருநாமங்களையே எவன் நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவன் எனக்கு மிகவும் பிரியமானவன் ஆகிறான். நான் அவனிடத்திலேயே வசிக்கின்றேன். இந்த நாமங் களால் பூஜிக்கப்பட்ட நான் பக்தனோடு கலந்து விடுகிறேன். ஆகை யினால் எனக்கு இதைவிட வேறு இருப்பிடம் தெரியவில்லை.

हिरण्यबाहुरित्यादिनाम्ना शम्भुरहं ऋषिः ।
देवताप्यहमेवात्र शक्तिर्गौरी मम प्रिया ॥ ४३ ॥

ஹிரண்யபா^{3}ஹுரித்யாதி^{3}நாம்நா ஶம்பு^{4}ரஹம் ரிஷி: ।
தே^{3}வதாப்யஹமேவாத்ர ஶக்திர்கௌ^{3}ரீ மம ப்ரியா ॥ 43 ॥

महेश एव संसेव्यः सर्वैरिति ह कीलकम् ।
धर्माद्यर्थफलं ज्ञेयं फलदाता सदाशिवः ॥ ४४ ॥

மஹேஶ ஏவ ஸம்ஸேவ்ய: ஸர்வைரிதி ஹ கீலகம் ।
த^{4}ர்மாத்^{3}யர்த்த^{2}ப^{2}லம் ஜ்ஞேயம் ப^{2}லதா^{3}தா ஸதா^{3}ஶிவ: ॥ 44 ॥

ஹிரண்யபாஹு என்று ஆரம்பிக்கும் இந்த ஆயிரம் நாமாக்க ளுக்கு ரிஷியும் தேவதையும் சம்புவாகிற நானேயாகிறேன். கௌரீ தேவீ சக்தி. ஸர்வை: கீலகம் தர்மம், அர்த்தம் என்ற இரண்டும் இதன் பலம். அதனைக் கொடுக்கும் ஸதாசிவனும் நானே.

अस्य श्रीशिवसहस्रनामस्तोत्रमहामन्त्रस्य शम्भुर्ऋषिः अनुष्टुप् छन्दः । सदाशिवो देवता ॥ महेश्वर इति बीजम् ॥ गौरी शक्तिः । सर्वैरिति कीलकम् । श्रीसाम्बसदाशिव प्रीत्यर्थे जपे विनियोगः । अथ ध्यानम् ।

அஸ்ய ஶ்ரீஶிவஸஹஸ்ரநாமஸ்தோத்ரமஹாமந்த்ரஸ்ய ஶம்பு^{4}ர் ரிஷி: அநுஷ்டுப் ச^{2}ந்த^3: । ஸதா^{3}ஶிவோ தே^{3}வதா ॥ மஹேஶ்வர இதி பீ^{3}ஜம் ॥ கௌ^{3}ரீ ஶக்தி: । ஸர்வைரிதி கீலகம் । ஶ்ரீஸாம்ப^3 ஸதா^{3}ஶிவ ப்ரீத்யர்த்தே^{2} ஜபே விநியோக^3: । அத^2 த்^{4}யாநம் ।

இந்த சிவ ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமென்னும் மஹாமந்திரத்துக்கு சம்பு ரிஷி, சந்தஸ் அனுஷ்டுப் ஆகும். ஸதாசிவன் தேவதை, மஹேச்வரன் பீஜம், கௌரீ சக்தி, ஸர்வை: என்பது கீலகம், ஸாம்ப (அம்பிகையோடு கூடிய) ஸதாசிவன் திருப்தியடைவதற்காக ஜபம் செய்கிறேன் என்று விநியோகம்.

शान्तं पद्मासनस्थं शशिधरमुकुटं पञ्चवक्त्रं त्रिनेत्रं
शूलं वज्रं च खड्गं परशुमभयदं दक्षिणाङ्गे वहन्तम् ।
नागं पाशं च घण्टां वरडमरुयुतं चांकुशं वामभागे
नानालङ्कारयुक्तं स्फटिकमणिनिभं पार्वतीशं नमामि ॥

ஶாந்தம் பத்3மாஸநஸ்த2ம் ஶஶித4ரமுகுடம் பஞ்சவக்த்ரம் த்ரிநேத்ரம்
ஶூலம் வஜ்ரம் ச கட்3க3ம் பரஶுமப4யத3ம் த3க்ஷிணாங்கே3 வஹந்தம் ।
நாக3ம் பாஶம் ச க4ண்டாம் வரட3மருயுதம் சாங்குஶம் வாமபா4கே3
நாநாலங்காரயுக்தம் ஸ்ப2டிகமணிநிப4ம் பார்வதீஶம் நமாமி ॥

உருவத்தைத் தியானிக்க வேண்டிய முறை

அமைதியுடன் கூடி பத்மாஸனத்தில் இருப்பவரும், பிறைச் சந்திரனைத் தரித்த மகுடத்தையுடையவரும், ஐந்து முகங்களையும் மூன்று கண்களையும் உடையவரும், சூலம், வஜ்ரம், வாள், கோடரி, அபய முத்திரை இவைகளை வலப் பக்கத்தில் கொண்டவரும், பாம்பு, கயிறு, மணி, வரத முத்திரை, உடுக்கை, ஈட்டி இவைகளை இடது பாகத்தில் உடையவரும், சிறந்த பலவிதமான அலங்காரங்களோடு கூடியவரும், ஸ்படிக மணிக்கு ஒப்பானவரும், பார்வதீ தேவியின் பதியுமான ஈச்வரனை வணங்குகின்றேன்.

இவ்வாறு தியானித்து வணங்கி விட்டு இந்த ஸஹஸ்ரநாம மஹாமந்திரத்தைத் தொடங்க வேண்டும்.

ஸஹஸ்ரநாமங்கள்

इति ध्यानम् ।
ओं हिरण्यबाहुः सेनानीर्दिक्पतिस्तरुराडुरः ।
हरिकेशः पशुपतिर्महान्त्सस्पिञ्जरो मृडः ॥ १ ॥

இதி த்[4]யாநம் ।
ஓம் ஹிரண்யபா[3]ஹு: ஸேநாநீர்தி[3]க்பதிஸ்தருராடு[3]ர: ।
ஹரிகேஶ: பஶுபதிர்மஹாந்த்ஸஸ்பிஞ்ஜரோ ம்ருட[3]: ॥ 1 ॥

1. ஹிரண்யபாஹு: — *தங்கமயமான கைகளையுடையவர்;* 2. ஸேனானீ: — *படைத் தலைவர்;* 3. திக்பதி: — *கிழக்கு முதலிய திசைகளுக்குத் தலைவர்;* 4. தருராட்: — *மரங்களுக்கு அரசனான அரச மரமாயிருப்பவர்;* 5. உர: — *உமாதேவியை பாகமாகக் கொண்ட மார்புப் பிரதேசத்தையுடையவர்;* 6. ஹரிகேஶ: — *உயர்ந்த அல்லது கருத்த கூந்தலையுடையவர்;* 7. பஶுபதி: — *பசுக்களுக்குத் தலைவர், பசு என்பது இங்கு நான்கு கால்கள் உடைய பிராணிகள் மட்டுமன்றி இரண்டு கால்கள் உள்ளவை உட்பட எல்லாப் பிராணிகளையும் குறிக்கும்;* 8. மஹான் — *பெரியவர்;* 9. ஸஸ்பிஞ்ஜர: — *இளம் புல்லின் நிறமுடையவர், அதாவது சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறமுடையவர் என்பதாம்;* 10. ம்ருட: — *சுகத்தைக் கொடுப்பவர்.*

विव्याधिर्बभ्लुशः श्रेष्ठः परमात्मा सनातनः ।
सर्वान्नराट् जगत्कर्ता पुष्टीशो नन्दिकेश्वरः ॥ २ ॥

விவ்யாதி[4]ர்ப[3]ப்[4]லுஶ: ஶ்ரேஷ்ட[2]: பரமாத்மா ஸநாதந: ।
ஸர்வாந்நராட் ஜக[3]த்கர்த்தா புஷ்டீஶோ நந்தி[3]கேஶ்வர: ॥ 2 ॥

11. விவ்யாதி: — நோயற்றவர் *(துஷ்டர்களை அவர்கள் உண்ணும் உணவாலேயே ஹிம்சிக்கிறவர் என்றும் பொருள் உண்டு);* 12. பப்லுஶ: — *விருஷபத்தில் வீற்றிருப்பவர்;*

13. ஶ்ரேஷ்டஃ — உயர்ந்தவர்; 14. பரமாத்மா — எங்கும் நிறைந்த பரமாத்மா; 15. ஸநாதனஃ — பழமையானவர்; 16. ஸர்வாந்நராட் — எல்லாவிதமான உணவுப் பொருள்களுக்கும் தலைவர்; 17. ஜகத்கர்த்தா — உலகத்தைப் படைத்தவர்; 18. புஷ்டீசஃ — நிறையும்படிச் செய்பவர்; 19. நந்திகேஶ்வரஃ — நந்திக்குத் தலைவர்.

आततायी महारुद्रः संसारास्त्रसुरेश्वरः ।
उपवीतिरहन्तात्मा क्षेत्रेशो वननायकः ॥ ३ ॥

ஆததாயீ மஹாருத்[3]ரஃ ஸம்ஸாராஸ்த்ரஸுரேஶ்வரஃ ।
உபவீதிரஹந்தாத்மா க்ஷேத்ரேஶோ வநநாயகஃ ॥ 3 ॥

20. ஆததாயிஃ — குற்றம் செய்பவன் உருவமாய் இருப்பவர்; 21. மஹாருத்ரஃ — பெரிய ருத்திரன்; 22. ஸம்ஸாராஸ்த்ரஃ — பிறப்பு இறப்பு என்ற இரண்டையும் அழிக்கும் அம்பாக இருப்பவர்; 23. ஸுரேஶ்வரஃ — தேவர்களுக்கெல்லாம் தலைவராயிருப்பவர்; 24. உபவீதிஃ — பூணூல் அணிந்தவர்; 25. அஹந்தாத்மா — கொல்லப்படாத ஆத்மாவாக இருப்பவர்; 26. க்ஷேத்ரேஶஃ — வயல்களுக்குத் தலைவர், ஜீவர்களின் உடலாகிற க்ஷேத்திரத்தில் ஆத்மாவாகவிருப்பவர் என்பது சிறப்புப் பொருள்; 27. வனநாயகஃ — காடுகளுக்குத் தலைவர்.

रोहितः स्थपतिः सूतो वाणिजोमन्त्रिरुन्नतः ।
क्षेत्रेशो हुतभुग्देवो भुवन्तिर्वारिवस्कृतः ॥ ४ ॥

ரோஹிதஃ ஸ்த[2]பதிஃ ஸூதோ வாணிஜோமந்த்ரிருந்நதஃ ।
க்ஷேத்ரேஶோ ஹுதபு[4]க்[3]தே[3]வீ பு[4]வந்திர்வாரிவஸ்க்ருதஃ ॥ 4 ॥

28. ரோஹிதஃ — சிவப்பு நிறமாக இருப்பவர்; 29. ஸ்தபதிஃ — உருவமமைப்பாளர்களுக்குத் தலைவர் *(எல்லாவிடங்களிலும் இருந்து கொண்டு எல்லாவற்றையும் ரக்ஷிப்பவர் என்ற பொருளும்*

கூறப்படுகிறது); 30. ஸூதஃ — *உலகமாகிய தேரை ஓட்டும் ஸாரதி;* 31. வாணிஜஃ — *வைச்ய ஸமூகமாக இருப்பவர் (வியாபாரி போல ஸர்வதேச வியவஹாரங்களையும் நன்கு அறிகின்றவர் என்ற பொருளும் கூறப்படுகிறது);* 32. மந்த்ரீஃ — *அமைச்சர் (ஏழு கோடி மஹாமந்திரங்கள் முதலியவற்றுக்குத் தலைவர்);* 33. உந்நதஃ — *உயர்ந்தவர்;* 34. க்ஷேத்ரேஶஃ — *வீடு,* வயல்கள் *ஆகிய வற்றுக்குத் தலைவர்,* புண்ய *ஸ்தலங்களின் தலைவர் என்றும் கூறலாம்;* 35. ஹுதபுக் — *ஹோமம் செய்யும்* வஸ்துக்களைச் *சாப்பிடுபவர்;* 36. தேவஃ — *தேவன் (ஒளியுடன் பிரகாசிப்பவர்);* 37. புவந்திஃ — *பூமியில் உள்ள அனைத்தையும்* வளர்க்கின்றவர்; 38. வாரிவஸ்க்ருதஃ — *பக்தர்களிடம் வசிப்பவர் (தனத்தை அளிப் பவர், ஜலத்தில் வசிக்கும் விஷ்ணு ஸ்வரூபமாகவோ அல்லது வருண ஸ்வரூபமாகவோ இருப்பவர் என்றும் பொருள் கூறலாம். நீர் வீழ்ச்சியாக இருப்பவர் என்ற பொருளும் கூறப்படுகிறது).*

उच्चैर्घोषो घोररूपः पत्तीशः पाशमोचकः ।
ओषधीशः पञ्चवक्त्रः कृत्स्नवीतोऽभयोऽनघः ॥ ५ ॥

உச்சைர்கோ⁴ஷோ கோ⁴ரரூபஃ பத்தீஶஃ பாஶமோசகஃ ।
ஓஷதீ⁴ஶஃ பஞ்சவக்த்ரஃ க்ருத்ஸ்நவீதோऽப⁴யோऽநக³ஃ ॥ 5 ॥

39. உச்சைர்கோஷஃ — *உரக்க ஒலி செய்பவர்;* 40. கோரரூபஃ — *பயங்கரமான உருவம் உடையவர்;* 41. பத்தீஶஃ — *காலாள் படைகளுக்குத் தலைவர்;* 42. பாஶமோசகஃ — *உயிர்களை உலக பாசமாகிற கட்டினின்றும் விடுவிப்பவர்;* 43. ஓஷதீஶஃ — *செடி கொடிகளுக்குத் தலைவர் (ரக்ஷகர்);* 44. பஞ்சவக்த்ரஃ — *ஐந்து முகம் உள்ளவர்;* 45. க்ருத்ஸ்நவீதஃ — *எல்லா உலகங்களிலும் வியாப்தராக உள்ளவர்;* 46. அபயஃ — *பயமற்றவர், அண்டிய வர்க்கு அபயமளிப்பவர்;* 47. அநகஃ — *பாபமற்றவர்.*

सहमानः स्वर्णरेता निर्व्याधिर्निरुपप्लवः ।
आव्याधिनीशः ककुभः निषङ्गीस्तेनरक्षकः ॥ ६ ॥

ஸஹமாநஃ ஸ்வர்ணரேதா நிர்வ்யாதி⁴ர்நிருபப்லவஃ ।
ஆவ்யாதி⁴நிஶஃ ககுப⁴ஃ நிஷங்கீ³ஸ்தேநரக்ஷகஃ ॥ 6 ॥

48. ஸஹமாநஃ — பக்தர்களுடைய குற்றங்களைப் பொறுக்கின்றவர்; 49. ஸ்வர்ணரேதாஃ — தங்கமயமான ரேதஸ் உடையவர்; 50. நிர்வ்யாதிஃ — நோயற்றவர்; 51. நிருபப்லவஃ — ஒட்டுதல் இல்லாதவர்; 52. ஆவ்யாதீனீஶஃ — *அனைவரையும் எதிர்த்தடிக்கும் சேனைகளுக்குத் தலைவர்.* 53. ககுபஃ — *(திருடர்களுக்குள்)* சிறந்தவர்; 54. நிஷங்கி அம்புப் பெட்டியை உடையவர்; 55. ஸ்தேனரக்ஷகஃ — திருடனையும் காப்பாற்றுபவர் *(ஸ்தேனஃ என்பது மறைந்து நின்று திருடுபவனைக் குறிக்கும்).*

मन्त्रात्मा तस्कराध्यक्षो वञ्चकः परिवञ्चकः ।
अरण्येशः परिचरो निचेरुस्तायुरक्षकः ॥ ७ ॥

மந்த்ராத்மா தஸ்கராத்⁴யக்ஷோ வஞ்சகஃ பரிவஞ்சகஃ ।
அரண்யேஶஃ பரிசரோ நிசேருஸ்தாயுரக்ஷகஃ ॥ 7 ॥

56. மந்த்ராத்மாஃ — மந்திரங்களே உருவானவர் *(பஞ்சாக்ஷரம், பஞ்சப்ரம்மம் முதலிய மந்திரங்கள் பரமேச்வரனின் ஸ்வரூபமாகவே கருதப்படுகின்றன)*; 57. தஸ்கராத்யக்ஷஃ — திருடர்களின் தலைவர் *(தஸ்கரஃ என்பது வெளிப்படையாகத் திருடுபவனைக் குறிக்கும்) (ஸ்தேனரக்ஷகஃ தஸ்க்ராத்யக்ஷகஃ என்ற இரண்டு நாமாக்களுக்கும் "இந்திரியங்கள் அவற்றின் விஷயங்கள் ஆகிய திருடர்களை நல்வழியில் திருப்பும் தலைவர்" என்பதை விசேஷ அர்த்தமாகக் கொள்க)*; 58. வஞ்சகஃ — ஏமாற்றுபவர் வடிவமாக இருப்பவர்; 59. பரிவஞ்சகஃ — எப்பொழுதும் ஏமாற்றுபவராக இருப்பவர் *(சில சமயத்தில் ஏமாற்றுபவனை வஞ்சகஃ என்றும் எப்பொழுதும் ஏமாற்றுபவனை பரிவஞ்சகஃ என்றும் கூறப்பட்டுள்ளது)*; 60. அரண்யேஶஃ — காடுகளின் தலைவர்; 61. பரிசரஃ — எங்கும் அலைந்து திரிபவனின் வடிவாயிருப்பவர்; 62. நிசேருஃ — மிக்க கவனத்துடன் சஞ்சரித்துக் கொண்டிருப்பவன்

ஸ்வரூபமானவர்; 63. ஸ்தாயுரக்ஷகஃ — நயவஞ்சனையால் திருடுபவனையும் காப்பாற்றுபவர்.

प्रकृतीशो गिरिचरः कुलुञ्चेशो गुहेष्टदः ।
भवः शर्वो नीलकण्ठः कपर्दी त्रिपुरान्तकः ॥ ८ ॥

ப்ரக்ருதீஶோ கி^{3}ரிசரஃ குலுஞ்சேஶோ கு^{3}ஹேஷ்டத^{3}ஃ ।
ப^{4}வஃ ஶர்வோ நீலகண்ட^{2}ஃ கபர்தீ^{3} த்ரிபுராந்தகஃ ॥ 8 ॥

64. ப்ரக்ருதீஶஃ — இயற்கையின் தலைவர், மாயையைத் தன்னிடம் அடக்கியவர்; 65. கிரிசரஃ — மலையில் சஞ்சரிப்பவர்; 65. குலுஞ்சேசஃ — வீடு, வயல் முதலியவைகளின் திருடர்களுக்குத் தலைவர். 67. குஹேஷ்டதஃ — முருகனுக்கு இஷ்டத்தைக் கொடுப்பவர்; 68. பவஃ — பவன் என்னும் பெயருடையவர், தன்னை அண்டினவர்களுக்கு மறு பிறவி இல்லாமல் செய்பவர்; 69. ஶர்வஃ — ஸம்ஹாரம் செய்பவர்; 70. நீலகண்டஃ — அம்ருதம் கடையும் பொழுது உண்டாகி உலகனைத்தையும் எரிக்கத் தொடங்கிய ஆலஹால விஷத்தைச் சாப்பிட்டுக் கழுத்தில் நிறுத்தி உலகத்தைக் காத்தவர். அதனால் ஏற்பட்ட கருப்பு நிறத்துடன் கூடிய கழுத்தையுடையவர்; 71. கபர்த்தீ — சடையுடன் கூடியவர். கபர்தம் என்பதும் மிகவும் போற்றத் தகுந்த ஜடை என்று பொருள்படும். வேறு எவராலும் தாங்க முடியாத, ஆகாயத்தினின்றும் விழுந்த, கங்கா ப்ரவாஹத்தை பரமேச்வரன், ஒருவரே தாங்கி தமது ஜடைகளால் அதைக் கிரஹித்தார் என்பது இதிஹாஸ புராணப் பிரசித்தம்; 72. த்ரிபுராந்தகஃ — முப்புரங்களை எரித்தவர். பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று பட்டினங்களைக் கொண்டு உலகைத் துன்புறுத்திய அரக்கர்களை அப்பட்டினங்களோடு அழித்தவர். இந்த வரலாறு வேதத்திலேயே கூறப்பட்டுள்ளது.

व्युप्तकेशो गिरिशयः सहस्राक्षः सहस्रपात् ।
शिपिविष्टश्चन्द्रमौलिर्ह्रस्वो मीढुष्टमोऽनघः ॥ ९ ॥

வ்யுப்தகேஶோ கி³ரிஶய: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ।
ஶிபிவிஷ்டஶ்சந்த்³ரமௌலிர்ஹ்ரஸ்வோ மீடு⁴ஷ்டமோऽநக⁴: ॥9॥

73. வ்யுப்தகேஶ: — கேசம் இல்லாதவர், ஆதிசங்கர பகவத் பாதாசாரியர்களின் உருவம்; 74. கிரிஶய: — திருக்கயிலாய மலையில் வஸிப்பவர்; 75. ஸஹஸ்ராக்ஷ: — பல ஆயிரக்கணக்கான கண்களையுடையவர்; ஸஹஸ்ரம் என்பது ஆயிரம் என்ற எண்ணை மட்டும் குறிக்காது அளவற்ற, பல்லாயிரக்கணக்கான என்ற பொருளைத் தருவதாகக் கொள்க; 76. ஸஹஸ்ரபாத்: — பல்லாயிரக்கணக்கான *(அளவற்ற)* பாதங்களையுடையவர்; 77. ஶிபிவிஷ்ட: — பசுக்களிடத்தில் யக்ஞ ரூபமாய் நிறைந்திருப்பவர்; 78. சந்த்ரமௌளி: — பிறைச் சந்திரனைத் தமது திருமுடியில் அணிந்தவர். 79. ஹ்ரஸ்வ: — மிகவும் சிறிய *(குட்டையான)* உருவத்தையுடையவர். அ, இ, உ இம்மூன்று எழுத்துக்களும் ஹ்ரஸ்வம் எனப்படும். இம்மூன்று எழுத்துக்கள் சேர்ந்தால் ஓ என்றாகி அத்துடன் 'ம்' சேர்ந்து ஓம் என்றாகிறது. ஆகவே ப்ரணவத்தின் பொருளாயும் கூறலாம். மேலும் ஹ்ரஸ்வ: என்பதால் தஹரோபாஸ்ய மூர்த்தி அதாவது ஹ்ருதயாகாசத்தில் தியானிக்க வேண்டிய மூர்த்தி கூறப்பட்டதாகவும் ஆகிறது; 80. மீடுஷ்டம: — மிக அதிகமாக மழையைப் பொழியும் மேகத்தின் வடிவமாக இருப்பவர், சுகமே உருவானவர், வேண்டியவற்றையெல்லாம் அளிப்பவர் முதலிய பொருள்கள்; 81. அநக: — பாப மற்றவர்.

वामनो व्यापकः शूली वर्षीयानजडोऽनणुः ।
ऊर्व्यः सूर्म्योग्रियः शीभ्यः प्रथमः पावकाकृतिः ॥ १० ॥

வாமநோ வ்யாபக: ஶூலீ வர்ஷீயாநஜடோऽநணு: ।
ஊர்வ்ய: ஸூர்ம்யோக்³ரிய: ஶீப்⁴ய: ப்ரத²ம: பாவகாக்ருதி: ॥10॥

82. வாமந: — குள்ளமானவர், வாமனாவதாரம் செய்த மஹாவிஷ்ணுவுக்கு பிக்ஷை போட்டு அருள் புரிந்த ஸதீ தேவியின்

கணவர் என்பது விசேஷ அர்த்தம். மஹா கணபதி ஸ்வரூபமாக இருப்பவர் என்பதும் இதன் பொருளாகும்; 83. வ்யாபகஃ — *எங்கும் நிறைந்தவர்;* 84. ஶூலி — *சூலாயுதத்தைக் கையில் கொண்டவர்;* 85. வர்ஷியான் — *மழையைப் பொழிவிக்கிறவர்;* 86. அஜடஃ — *ஞானியாக இருப்பவர்;* 87. அநணுஃ — *பெரியதாக இருப்பவர்;* 88. ஊர்வ்யஃ — *பூமியில் இருப்பவர்;* 89. ஸூர்ம்யஃ — *அழகிய அலைகளை உடைய ஆறுகளில் இருப்பவர்;* 90. அக்ரியஃ — *உலக உற்பத்திக்கு முன்பே இருப்பவர்;* 91. ஶீப்யஃ — *பெரிய வெள்ளத்தில் இருப்பவர்;* 92. ப்ரதமஃ — *(தேவர்களுள்) முதல்வராக இருப்பவர்;* 93. பாவகாக்ருதிஃ — *அக்னியின் வடிவமாக இருப்பவர்.*

आचारस्तारकस्तारो वस्वन्योऽनन्तविग्रहः ।
द्विष्यः स्रोतस्य ईशानो धुर्यो गव्यो मनोन्मनः ॥ ११ ॥

ஆசாரஸ்தாரகஸ்தாரோ வஸ்வந்யோऽநந்தவிக்[3]ரஹஃ ।
த்[3]விஷ்யஃ ஸ்ரோதஸ்ய ஈஶாநோ து[4]ர்யோ க[3]வ்யோ
மநோந்மநஃ ॥ 11 ॥

94. ஆசாரஃ — *ஒழுக்கம் உள்ளவர், ஒழுக்கம் நிறைந்தவர்களால் பூஜிக்கப்படுபவர்;* 95. தாரகஃ — *(பிறவிக் கடலை) தாண்டவைப்பவர், காப்பாற்றுபவர்;* 96. தாரஃ — *ப்ரணவ ஸ்வரூபி. ப்ரணவத்தின் பொருள் பரமேச்வரன் என்று வேதத்திலும் சிவ புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது. சொல்லுக்கும் பொருளுக்கும் பேதமில்லை என்ற நியாயப்படி பரமசிவனே ப்ரணவ ஸ்வரூபமாகிறார்;* 97. வஸ்வந்யஃ — *செல்வம் நிறைந்தவர்;* 98. அநந்த விக்ரஹஃ — *முடிவற்ற உருவத்தை உடையவர்;* 99. த்விஷ்யஃ — த்வேஷிப்பவர் *(அதர்மிகளைத் த்வேஷிப்பவர் என்பதாம்)* இரண்டு போல் தோற்றமளிக்கும் உலகை இல்லாமற் செய்து *பரமாத்மாவாயிருப்பவர்;* 100. ஸ்ரோதஸ்யஃ — *சிறு ஆற்று வெள்ளமாய் இருப்பவர்;* 101. ஈஶாநஃ — *ஈசானர் என்ற பெயருள்ளவர். தலைவர், ப்ரபு என்ற பொருள்கள் உள;* 102. துர்யஃ —

முதன்மையாக இருப்பவர், தலைவர், பொறுப்புகளைத் தாங்கு பவர் என்பன போன்ற அர்த்தங்கள்; 103. கவ்ய꞉ — பசுக்களி னின்றும் கிடைக்கும் பொருள்களாய் இருப்பவர்; 104. மனோந் மன꞉ — மனோன்மனர் என்ற பெயருள்ளவர்.

पूर्वजोऽपरजो ज्येष्ठः कनिष्ठो विश्वलोचनः ।
अप्रगल्भ्यो मध्यमोर्म्यो जघन्यो बुध्नियः शुभः ॥ १२ ॥

பூர்வஜோऽபரஜோ ஜ்யேஷ்ட்ட^{2}꞉ கநிஷ்ட்டோ^{2} விஶ்வலோசந꞉ ।
அப்ரக^{3}ல்ப்^{4}யோ மத்^{4}யமோர்ம்யோ ஜக^{4}ந்யோ பு^{3}த்^{4}நிய꞉ ஶுப^{4}꞉ ॥12॥

105. பூர்வஜ꞉ — முன்னால் பிறந்தவர்; 106. அபரஜ꞉ — பின்னால் பிறந்தவர்; 107. ஜ்யேஷ்ட꞉ — மூத்தவர்; 108. கநிஷ்ட꞉ — இளையவர்; 109. விஶ்வலோசந꞉ — உலகத்தையே கண்ணாகக் கொண்டவர்; 110. அப்ரகல்ப்ய꞉ — பேசாதவர்; 111. மத்யம꞉ — நடுவில் இருப்பவர்; 112. ஊர்ம்ய꞉ — அலைகளாக இருப்பவர்; 113. ஜகந்ய꞉ — கீழானவர், மிகவும் கீழானவர்களையும் ஆட் கொள்ளுபவர்; 114. புத்நிய꞉ — மரம் முதலியவற்றின் அடிப் பாகத்தில் தோன்றிய வேர் முதலியவைகளாக இருப்பவர்; 115. ஶுப꞉ — சுபத்தைச் செய்பவர்.

प्रतिसूर्योऽनन्तरूपः सोम्यो याम्यः सुराश्रयः ।
खल्यो वर्योभय क्षेम्यः श्लोक्यः पथ्यो नभोग्रणीः ॥ १३ ॥

ப்ரதிஸூர்யோऽநந்தரூப꞉ ஸோம்யோ யாம்ய꞉ ஸுராஶ்ரய꞉ ।
க^{2}ல்யோ வர்யோப^{4}ய ஶ்லோக்ய꞉ பத்^{2}யோ நபோ^{4}க்^{3}ரணீ꞉ ॥13॥

116. ப்ரதிஸூர்ய꞉ — சூரியனைத் தன் பிரதிபிம்பமாகக் கொண்டவர்; 117. அநந்தரூப꞉ — முடிவற்ற உருவத்தைக் கொண்டவர்; 118. ஸோம்ய꞉ — அழகானவர், சாந்தமானவர்; 119. யாம்ய꞉ — யமனைஅடக்கியவர்; 120. ஸுராஶ்ரய꞉ — தேவர்களுக்கு ஆச்ரயமாய் இருப்பவர், அதாவது தேவர்கள் சென்று அடையு

மிடம் என்பதாம்; 121. கல்யஃ — களத்திலிருப்பவர்; 122. வர்யஃ — சிறந்தவர், மேலானவர்; 123. பயக்ஷேம்யஃ — இம்மையிலும், மறுமையிலும் காப்பவர்; 124. ஶ்லோக்யஃ — வேத மந்திரங் களால் கொண்டாடப்படுபவர்; 125. பத்யஃ — நல்லதையே செய் பவர்; 126. நபஃ — இதயமாகிற ஆகாயத்தில் உறைபவர்; 127. அக்ரணீஃ — எல்லோராலும் முதன்மையாய்ப் போற்றப்படுபவர்.

वन्योऽवसान्यः पूतात्मा श्रवः कक्ष्यः प्रतिश्रवः ।
आशुषेणो महासेनो महावीरो महारथः ॥ १४ ॥

வந்யோऽவஸாந்யஃ பூதாத்மா ஶ்ரவஃ கக்ஷ்யஃ ப்ரதிஶ்ரவஃ ।
ஆஶுஷேணோ மஹாஸேநோ மஹாவீரோ மஹாரத^{2}ஃ ॥ 14 ॥

128. வந்யஃ — காட்டில் வசிப்பவர்; 129. அவஸாந்யஃ — வேத முடிவில் வீற்றிருப்பவர்; 130. பூதாத்மா — புனிதமானவர்; 131. ஶ்ரவஃ — ஒலியாக இருப்பவர்; 132. கக்ஷ்யஃ — பிரிவுகளைக் கொண்டவர், புதர்களில் செடி கொடி முதலியவை ரூபமாக இருப்பவர்; 133. ப்ரதிஶ்ரவஃ — பக்தர்களுக்கு பிரதிக்ஞை செய்பவர், எதிரொலி வடிவமாயிருப்பவர்; 134. ஆஶுஷேணஃ — வேகமாய்ச் செல்பவர்; 135. மஹாஸேநஃ — பெரிய சேனாதி பதியாய் இருப்பவர், முருகன் வடிவாயிருப்பவர்; 136. மஹாவீரஃ — பெரிய வீரன்; 137. மஹாரதஃ — பெரிய தேர் வீரராயிருப்பவர் *(ஒரு லக்ஷம் போர் வீரர்களைக் கொண்ட ஸைன்யத்தைத் தனி ஒரு வனாக வெற்றி கொள்ளும் வீரனுக்கு மஹாரதன் என்று பெயர்).*

शूरोऽतिघातको वर्मी वरूथी बिल्मिरुद्यतः ।
श्रुतसेनः श्रुतः साक्षी कवची वशकृद्वशी ॥ १५ ॥

ஶூரோऽதித்^{3}யாதகோ வர்மீ வரூதீ^{2} பி^{3}ல்மிருத்^{3}யதஃ ।
ஶ்ருதஸேநஃ ஶ்ருதஃ ஸாக்ஷீ கவசீ வஶக்ருத்^{3}வஶீ ॥ 15 ॥

138. ஶூரஃ — சூரன் வடிவில் இருப்பவர் *(சூரன் என்ற சொல் போர் வீரன், பராக்கிரமமுள்ளவன், வீரன் முதலிய பொருள்*

களைத் தரும்); 139. அதிகாதகঃ — *பிரளய காலத்தில் ஜீவர்களை அழிப்பவர்*; 140. வர்மீ — *கவசமணிந்த வடிவினர்*; 141. வரூதிঃ — ஸைன்யத்தோடு இருப்பவர், தேரில் சிறந்த ரக்ஷண ஸ்தானம் உடையவர்; 142. பில்மிঃ — தலைப் பாகையுடன் கூடிய வடிவினர்; 143. உத்யதঃ — முயற்சி செய்பவன் வடிவினர் *(அதாவது ஊக்கத்துடன் தன் தொழிலைச் செய்பவன் என்று கொள்ளலாம்)*; 144. ஶ்ருதஸேநঃ — புகழ் பெற்ற ஸேனைகளையுடையவர்; 145. ஶ்ருதঃ — வேதங்களில் பிரஸித்தி பெற்றவர்; 146. ஸாக்ஷீ — பார்த்துக் கொண்டிருப்பவர்; 147. கவசீ — சிவ கவசத்தில் சொல்லப்பட்டவர், மந்திரத்தால் ரக்ஷிக்கப்பட்ட வடிவினர்; 148. வஶக்ருத்ঃ — ஜீவர்களை நல்வழிப்படுத்துபவர்; 149. வஶீঃ — பக்தர்களுக்கு வசமானவர்.

अहनन्योऽनन्यनाथो दुन्दुभ्योऽरिष्टनाशकः ।
धृष्णु प्रमृश ईज्यात्मा वदान्यो वेदसम्मतः ॥ १६ ॥

அஹநந்யோऽநந்யநாதோ² து³ந்து³ப்⁴யோऽரிஷ்டநாஶகঃ ।
த்⁴ருஷ்ணு ப்ரம்ருஶ ஈஜ்யாத்மா வதா³ந்யோ வேத³ஸம்மதঃ ॥16॥

150. அஹநந்யঃ — துஷ்டர்களை அடிப்பவர்; 151. அநந்ய நாதঃ — தனக்கு மேல் ஒருவரும் இல்லாதவர்; 152. துந்துப்யঃ — துந்துபி என்னும் வாத்தியம் போன்று முழங்குபவர், அதாவது அதன் சப்த வடிவில் இருப்பவர்; 153. அரிஷ்டநாஶகঃ — துன்பங்களைப் போக்கடிப்பவர்; 154. த்ருஷ்ணுঃ — தைரியத்தை உடையவர் *(போரில் புறங்காட்டாதவர்)*; 155. ப்ரம்ருஶঃ — எதிரி ஸைன்யங்களின் ரஹசியங்களை நன்கு அறிகின்றவர், சந்தேகத்தைத் தெளிவிப்பவர்; 156. ஈஜ்யாத்மாঃ — யாக உருவானவர்; 157. வதாந்யঃ — போற்றத் தக்கவர், தாராளமாக வாரி வழங்கும் வள்ளல்; 158. வேதஸம்மதঃ — வேதங்களின் உள்பொருளானவர்.

तीक्ष्णेषुपाणिः प्रहितः स्वायुधः शस्त्रवित्तमः ।
सधन्वा सुप्रसन्नात्मा विश्वक्रः सदागतिः ॥ १७ ॥

தீக்ஷ்ணேஷுபாணிः ப்ரஹிதः ஸ்வாயுத⁴ः ஶஸ்த்ரவித்தம ।
ஸத⁴ந்வா ஸுப்ரஸந்நாத்மா விஶ்வவக்ரः ஸதா³க³திः ॥ 17 ॥

159. தீக்ஷ்ணேஷுபாணிः — *கூர்மையான அம்புகளைக் கையில் கொண்டவர்;* 160. ப்ரஹிதः — *நன்மை செய்பவர்;* 161. ஸ்வாயுதः — *சிறந்த ஆயுதமுடையவர்;* 162. சஸ்த்ர வித்தமः — *ஆயுதம் ஏந்தியவர்களில் சிறந்தவர்;* 163. ஸுதந்வாः — *சிறந்த வில்லையுடையவர்;* 164. ஸுப்ரஸந்நாத்மாः — *பக்தர்களுக்கு அருள் புரிபவர்;* 165. விஶ்வவக்த்ரः — *உலகத்தையே முகமாகக் கொண்டவர்;* 166. ஸதாகதிः — *எப்பொழுதும் நற்கதியைக் கொடுப்பவர்.*

स्रुत्युः पथ्यो विश्वबाहुः काट्यो नीप्यः शुचिस्मितः ।
सूद्यःसरस्यो वैशन्तो नाद्यः कूप्य ऋषिर्मुनिः ॥ १८ ॥

ஸ்ருத்யுः பத்²யோ விஶ்வபா³ஹுः காட்யோ நீஷ்பः ஶுசிஸ்மிதः।
ஸூத்³யःஸரஸ்யோ வைஶந்தோ நாத்³யः கூப்ய ரிஷிர்முநிः ॥18॥

167. ஸ்ருத்யः — *ஒற்றையடிப் பாதையில் செல்லுபவர்;* 168. பத்யः — *நல்ல பாதையில் செல்லுபவர் வடிவில் இருப்பவர்;* 169. விஶ்வபாஹுः — *உலகத்தையே கையாகக் கொண்டவர்;* 170. காட்யः — *கொஞ்சம் ஜலமுள்ள வாய்க்கால் நீரில் இருப்பவர்;* 171. நீப்யः — *அருவி நீரில் இருப்பவர்;* 172. ஶுசிஸ்மிதः — *அழகிய புன்சிரிப்போடு கூடியவர்;* 173. ஸூத்யः — *மடுவில் உள்ள நீரில் இருப்பவர்;* 174. ஸரஸ்யः — *ஏரி, குளம் முதலிய வற்றின் நீரில் இருப்பவர்;* 175. வைஸந்தः — *சிறு குளங்களின் (குட்டைகளில்) நீரில் இருப்பவர்;* 176. நாத்யः — *ஆறுகளின் நீரில் இருப்பவர்;* 177. கூப்யः — *கிணற்று நீராய் இருப்பவர்;* 178. ரிஷிः — *ரிஷியாய் இருப்பவர். "ருத்ரோ மஹர்ஷி" என்பது உபநிஷத் வாக்கியம்;* 179. முநிः — *முனிவர் வடிவமாயிருப்பவர்.*

वट्यो वर्ष्यो वर्णरूपः कुमारः कुशलोऽतुलः ।
मेध्यो वेद्यो मेधशक्तिर्विद्युत्यो मेधविक्रमः ॥ १९ ॥

வட்ய்யோ வர்ஷ்யோ வர்ணரூப: குமார குஶலோऽதுல: ।
மேத்4யோ வேத்3யோ மேத4ஶக்திர்வித்3யுத்யோ மேத4விக்ரம: ॥19॥

180. **வட்ய:** — *பள்ளத்து ஜலமாக இருப்பவர்;* 181. **வர்ஷ்ய:** — *மழை நீராய் இருப்பவர்;* 182. **வர்ணரூப:** — *எழுத்துக்களின் வடிவமாக இருப்பவர்;* 183. **குமார:** — *மகன் அல்லது சிறியவன் வடிவில் இருப்பவர், முருகன் வடிவில் இருப்பவர்;* 184. **குஶல:** — *திறமையுள்ளவன் அல்லது அறிவுள்ளவனாயிருப்பவர்;* 185. **அதுல:** — *எடை போட முடியாதவர், ஒப்பில்லாதவர், உவமையில்லாதவர், மதிப்பிட முடியாதவர்,* 186. **மேத்ய:** — *புனிதமானவர்;* 187. **வேத்ய:** — *அறியத்தக்கவர்;* 188. **மேகஶக்தி:** — *மேகத்திற்கு சக்தியாக இருப்பவர்;* 189. **வித்யுத்ய:** — *மின்னலாக இருப்பவர்;* 190. **மோகவிக்ரம:** — *மோகம் போன்று வல்லவர்.*

दुराधरो दुराराध्यो निर्द्वन्द्वो दुःसहप्रदः ।
ईध्रियः क्रोधशमनो जातूकर्ण्यः पुरुष्टुतः ॥ २० ॥

து3ராத4ரோ து3ராராத்4யோ நிர்த்3வந்த்3வோ து3:ஸஹப்ரத3: ।
ஈத்4ரிய: க்ரோத4ஶமநோ ஜாதூகர்ண்ய: புருஷ்டுத: ॥ 20 ॥

191. **துராதார:** — *தனக்கு ஆதாரம் எதுவும் இல்லாதவர்;* 192. **துராராத்ய:** — *முயற்சி செய்தே வழிபடத் தக்கவர்;* 193. **நிர்த்வந்த்வ:** — *இரண்டற்றவர் (சுகம்-துக்கம், உஷ்ணம்-சீதம், ஸம்பத்-விபத் இம்மாதிரி இரண்டிரண்டாகச் சொல்லப்படுபவை அற்றவர், இவைகளால் துன்பப்படும் ஜீவர்களைக் காப்பவர்);* 194. **துஸ்ஸஹப்ரத:** — *ஸஹிக்க முடியாத தன்மையைக் கொடுப்பவர்;* 195. **ஈத்ரிய:** — *நிர்மலமான சரத்கால மேகத்தில் இருப்பவர்;* 196. **க்ரோதஶமந:** — *கோபத்தை அடங்கச் செய்பவர்;* 197. **ஜாதூகர்ண்ய:** — *ஒரு முனிவர்;* 198. **புருஷ்டுத:** — *நன்கு துதிக்கப்படுபவர்.*

आतप्यो वायुरजरो वात्यः कात्यायनीप्रियः ।
वास्तव्यो वास्तुपो रेष्म्यो विश्वमूर्धा वसुप्रदः ॥ २१ ॥

ஆதப்யோ வாயுரஜரோ வாத்யஃ காத்யாயநீப்ரியஃ ।
வாஸ்தவ்யோ வாஸ்துபோ ரேஷ்ம்யோ விஶ்வமூர்த்தா[4]
வஸுப்ரத[3] ॥ 21 ॥

199. ஆதப்யஃ — வெய்யிலாக இருப்பவர்; 200. வாயுஃ — *காற்றாக* இருப்பவர்; 201. அஜரஃ — மூப்பில்லாதவர், அதாவது என்றும் இளமையாக இருப்பவர்; 202. வாத்யஃ — சுழல் காற்றாக இருப்பவர்; 203. காத்யாயநீப்ரியஃ — காத்யாயனீ என்ற ஒரு பெயர் கொண்ட பார்வதி தேவியின் கணவர் *(காத்யாயனர் என்ற ஒரு மஹரிஷிக்குப் பெண்ணாகத் தோன்றிய போது உமா தேவியாருக்கு காத்யாயனீ என்ற பெயர் ஏற்பட்டது)*; 204. வாஸ்தவ்யஃ — மலையிலுள்ள வஸ்துக்கள்தோறும் அவ்வவ்வடிவில் உறைபவர்; 205. வாஸ்துபஃ — வீடு கட்டுவதற்கு உதவும் மனையைக் காப்பவர்; 206. ரேஷ்ம்யஃ — பிரளய காலத்தில் இருப்பவர்; 207. விஶ்வமூர்த்தாஃ — உலகத்திற்கு மேலான இடத்தில் இருப்பவர்; 208. வஸுப்ரதஃ — செல்வம் கொடுப்பவர்.

सोमस्ताम्रोऽरुणः शङ्गो रुद्रः सुखकरः सुहृत् ।
उग्रो भीमो भीमकर्मा भीमो भीमपराक्रमः ॥ २२ ॥

ஸோமஸ்தாம்ரோऽருணஃ ஶங்கோ[3] ருத்[3]ரஃ ஸுக[2]கரஃ ஸுஹ்ருத் ।
உக்[3]ரோ பீ[4]மோ பீ[4]மகர்மா பீ[4]மோ பீ[4]மபராக்ரமஃ ॥ 22 ॥

209. ஸோமஃ — உமாதேவியுடன் கூடியவர், சந்திரனாக இருப்பவர்; 210. தாம்ரஃ — தாமிரம் போல் சிவந்தவர் *(உதய காலத்து நிறம்)*; 211. அருணஃ — கொஞ்சம் சிவந்தவர் *(உதயமான பிறகு உள்ள சூரியனது நிறம்)*; 212. ஶங்கஃ — ஸௌக்கியத்தைக் கொடுப்பவர்; 213. ருத்ரஃ — ருத்ரன், ஸம்ஸார துக்கத்தை நிவர்த்தி செய்கின்றவர்; 214. ஸுககரஃ — ஸுகத்தைச் செய்கின்றவர்; 215. ஸுஹ்ருத்ஃ — நண்பன் வடிவிலிருப்பவர்; 216. உக்ரஃ — விரோதிகளிடம் கடுமையாக இருப்பவர்; 217. பீமஃ — பயங்கரமாக இருப்பவர்; 218. பீமகர்மா — பயங்கரமான காரியத்தைச் செய்கிறவர்;

219. பீமஃ — *பீமன் (பயங்கரர், பாண்டவரில் இரண்டாவது அரச குமாரனுக்கு பீமன் என்று பெயர். அவன் சிறந்த சிவ பக்தன்; சிவ பூஜையில் சிறந்தவன்)*; 220. பீமபராக்ரமஃ — பயங்கரமான வல்லமை உடையவர்.

अग्रेवधोहनेयात्मा हन्ता दूरवधोवधः ।
शम्भुर्मयोभूर्नित्यश्च शङ्करः कीर्तिसागरः ॥ २३ ॥

அக்[3]ரேவதோ[4]ஹநேயாத்மா ஹந்தா தூ[3]ரவதோ[4]வத[4]ஃ ।
ஶம்பு[4]ர்மயோபூ[4]ர்நித்யஶ்ச ஶங்கரஃ கீர்த்திஸாக[3]ரஃ ॥ 23 ॥

221. அக்ரேவதஃ — எதிரிகளை முன்னின்று கொல்பவர்; 222. ஹநேயாத்மா — கொல்லும் தொழிலாய் இருப்பவர்; 223. ஹந்தா — கொல்பவர்; 224. தூரேவதஃ — தொலைவில் இருப்பவர்களைக் கொல்பவர்; 225. வதஃ — அழிப்பவர்; 226. ஶம்புஃ — இவ்வுலகில் ஏற்படும் ஸுகத்திற்குக் காரணமானவர்; 227. மயோபூஃ — மோக்ஷ சுகமாய்த் தோன்றுபவர். வேதத்தில் ''யத்வை ஶிவம் தந்மய'' எது மங்களமோ அதுவே ஸௌக்யம். எனவே வீடு என்னும் மேலான புருஷார்த்தத்தை அருளுபவர்; 228. நித்யஃ — என்றும் இருப்பவர்; 229. ஶங்கரஃ — இஹலோக சுகத்தை அளிப்பவர், உலகிற்கு நன்மை புரியும் ஒரே கடவுள்; 230. கீர்த்திஸாகரஃ — கடல் போன்று பரந்த புகழை உடையவர்.

मयस्करः शिवतरः खण्डः परशुजः शुचिः ।
तीर्थ्यः कूल्योऽमृताधीशः पार्योऽवार्योऽमृताकरः ॥ २४ ॥

மயஸ்கரஃ ஶிவதரஃ க[2]ண்ட[3]ஃ பரஶுஜஃ ஶுசிஃ ।
தீர்த்[2]யஃ கூல்யோऽம்ருதாதீ[4]ஶஃ பார்யோऽவார்யோऽம்ருதாகரஃ ॥24॥

231. மயஸ்கரஃ — *மோக்ஷ சுகத்தை அளிப்பவர்*; 232. ஶிவதரஃ — தன்னை அடைந்தவரையும் சிவமயமாக்கும் அதிமங்கள வடிவினர் *(நமஃ ஶிவாயச, ஶிவதராயச என்று ஸ்ரீ ருத்திரத்தில்*

பஞ்சாக்ஷர மந்திரத்தையும், அதுவே மேலானதென்றும் கூறப்பட்டுள்ளது); 233. கண்டஃ — துண்டாக இருப்பவர் *(பாரதம் கிம் புருஷம் முதலிய ஒன்பது கண்டங்கள் கொண்ட உலகாயும், அதற்கு மேற்பட்டவராயுமிருப்பவர்)*; 234. பரசுஜு — கோடாரியைக் கொண்டவர்; 235. ஶுசிஃ — பரிசுத்தமானவர்; 236. தீர்த்யஃ — புண்ய தீர்த்தங்களின் வடிவானவர், மிகவும் புனிதமானவர்; 237. கூல்யஃ — நதி முதலியவைகளின் கரையாக இருப்பவர், நதிக் கரையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகளின் வடிவாக இருப்பவர்; 238. அம்ருதாதீஶஃ — மோக்ஷத்திற்குத் தலைவராயிருப்பவர்; 239. பார்யஃ — நதியின் அக்கரையில் இருப்பவர் *(முமுக்ஷுக்களால் தியானம் செய்யப்படுபவராய் ஸம்ஸார சமுத்திரத்தின் அக்கரையில் இருப்பவர் என்று வேறு பொருளும் கூறப்பட்டிருக்கின்றது)*; 240. அவார்யஃ — நதியின் இக்கரையில் இருப்பவர் *(காம்ய பலன்களை அளிப்பவராய் ஸம்ஸார ஸாகரத்தின் மத்தியிலேயே இருக்கிறார் என்று வேறு பொருளும் கூறப்பட்டுள்ளது)*. 241. அம்ருதாகரஃ — அம்ருதத்துக்கு இருப்பிடமானவர்.

शुद्धः प्रतरणो मुख्यः शुद्धपाणिरलोलुपः ।
उच्च उत्तरणस्तार्यस्तार्यज्ञस्तार्यहृद्गतिः ॥ २५ ॥

ஶுத்^{3}த^{4}ஃ ப்ரதரணோ முக்^{2}யஃ ஶுத்^{3}த^{4}பாணிரலோலுபஃ ।
உச்ச உத்தரணஸ்தார்யஸ்தார்யஜ்ஞஸ்தார்யஹ்ருத்^{3}க^{3}திஃ ॥ 25 ॥

242. ஶுத்தஃ — சுத்தமானவர்; 243. ப்ரதரணஃ — பாவத்தினின்றும் கரையேற்றும் மந்த்ர ஜப வடிவாகியவர்; 244. முக்யஃ — முக்கியமானவர் *(முதன்மையானவர்)*; 245. ஶுத்தபாணிஃ — சுத்தமான *(அழகிய)* கைகளையுடையவர்; 246. அலோலுபஃ — ஆசை அற்றவர்; 247. உச்சஃ — உயர்ந்தவர்; 248. உத்தரணஃ — ஸம்ஸார சமுத்திரத்தினின்றும் கரையேற்றும் தத்துவ ஞான வடிவாயிருப்பவர்; 249. தார்யஃ — *(ஸம்ஸாரக் கடலைத்)* தாண்டுவிப்பவர்; 250. தார்யக்ஞஃ — தாரகப் பொருள் அறிந்தவர்; 251. தார்யஹ்ருத்கதிஃ — பிரணவ ஸ்வரூபமாய் மனதில் தியானிக்கத் தக்கவர்.

आतार्यः सारभूतात्मा सारग्राही दुरत्ययः ।
आलाद्यो मोक्षदः पथ्योऽनर्थहा सत्यसंगरः ॥ २६ ॥

ஆதார்யঃ ஸாரபூ^{4}தாத்மா ஸாரக்^{3}ராஹி து^{3}ரத்யயঃ ।
ஆலாத்^{3}யோ மோக்ஷத^3ঃ பத்^{2}யோऽநர்த^{2}ஹா ஸத்யஸங்க^{3}ரঃ ॥26॥

252. ஆதார்யঃ — *(தத்துவ ஞானம் பெறாமல் காமிய கர்மாக்கள் மூலம் ஸம்ஸார ஸாகரத்துக்கு)* திரும்பித் திரும்பி வரும் ஜீவர்களுக்கும் அருள் புரிபவர்; 253. ஸாரபூதாத்மாঃ — ஸாரமான ஆத்மா; 254. ஸாரக்ராஹீঃ — ஸாரத்தை எடுத்துக் கொள்பவர் *(படிப்பு, குலம் முதலியன இல்லாவிட்டாலும் அடிய வர்களின் உண்மையான பக்தியையே விரும்பி ஏற்றுக் கொள் பவர்)*; 255. துரத்யயঃ — தாண்ட முடியாதவர்; 256. ஆலாத்யঃ — கர்ம பலனைப் புசிக்கும் ஜீவனுடன் இருந்து அவனைத் தூண்டு பவர் *(ஆலாத்ய என்பதில் உள்ள ஆ, ல என்ற இரண்டும் முறையே ஆதியையும் லயத்தையும், அதாவது அந்தத்தையும் குறிப்பதாகக் கொண்டு இவ்வுலகத்துக்கு ஆதியும் அந்தமாயும் இருப்பவர் என்று கொள்ளலுமாம்)*; 257. மோக்ஷதঃ — மோக்ஷமென்னும் நான்காவது புருஷார்த்தத்தைக் கொடுப்பவர்; 258. பத்யঃ — நன்மையானவர்; 259. அநர்த்தஹா — ஆபத்தைப் போக்கடிப் பவர்; 260. ஸத்யஸங்கரঃ — உண்மையான யுத்தத்தை உடையவர்.

शष्प्यः फेन्यः प्रवाह्यश्च सिकत्यः सैकताश्रयः ।
इरिण्यो ग्रामणीः पुण्यः शरण्यः शुद्धशासनः ॥ २७ ॥

ஶஷ்ப்யঃ பே^{2}ந்யঃ ப்ரவாஹ்யஶ்ச ஸிகத்யঃ ஸைகதாஶ்ரயঃ ।
இரிண்யோ க்^{3}ராமணீঃ புண்யঃ ஶரண்யঃ ஶுத்^{3}த^{4}ஶாஸநঃ ॥ 27 ॥

261. ஶஷ்ப்யঃ — இளம் புல்லாய் இருப்பவர்; 262. பேந்யঃ — நுரையாயிருப்பவர்; 263. ப்ரவாஹ்யঃ — பெருவெள்ளமா யிருப்பவர்; 264. ஸிகத்யঃ — மணலாயிருப்பவர்; 265. ஸைக தாஶ்ரயঃ — மணலுக்கு இருப்பிடமாய் இருப்பவர்; 266. இரிண்யঃ

— களர் நிலத்தில் இருப்பவர்; 267. க்ராமணீ — கிராமத் தலைவர்; 268. புண்யஃ — புண்ணிய வடிவினர்; 269. ஶரண்யஃ — அடைக் கலம் புகுந்தவரைக் காப்பவர்; 270. ஶூத்தசாஸநஃ — முறைப்படி கட்டளையிடுபவர்.

वरेण्यो यज्ञपुरुषो यज्ञेशो यज्ञनायकः ।
यज्ञकर्ता यज्ञभोक्ता यज्ञविघ्नविनाशकः ॥ २८ ॥

வரேண்யோ யஜ்ஞபுருஷோ யஜ்ஞேஶோ யஜ்ஞநாயகஃ ।
யஜ்ஞகர்த்தா யஜ்ஞபோ[4]க்தா யஜ்ஞவிக்[4]நவிநாஶகஃ ॥ 28 ॥

271. வரேண்யஃ — மிகச் சிறந்தவர், போற்றத் தக்கவர்; 272. யக்ஞபுருஷஃ — யாகங்களில் போற்றப்படுபவர்; 273. யக்ஞேசஃ — யாகங்களுக்கு ஈச்வரர்; 274. யக்ஞநாயகஃ — யாகங்களுக்குத் தலைவர்; 275. யக்ஞகர்த்தா — யாகத்தைச் செய்பவர்; 276. யக்ஞ போக்தா — யாகங்களில் கொடுக்கும் ஹவிஸ்ஸை ஏற்றுக் கொள் பவர்; 277. யக்ஞவிக்நவிநாசகஃ — வேள்விகளுக்கு ஏற்படும் தடைகளைப் போக்கடிப்பவர்.

यज्ञकर्मफलाध्यक्षो यज्ञमूर्तिरनातुरः ।
प्रपथ्यः किंशिलो गेह्यो गृह्यस्तल्प्यो धनाकरः ॥ २९ ॥

யஜ்ஞகர்மப[2]லாத்[4]யக்ஷோ யஜ்ஞமூர்த்திரநாதுரஃ ।
ப்ரபத்[2]யஃ கிம்ஶிலோ கே[3]ஹ்யோ க்[3]ருஹ்யஸ்தல்ப்யோ
த[4]நாகரஃ ॥ 29 ॥

278. யக்ஞகர்ம பலாத்யக்ஷஃ — யாகங்களின் பலனைக் கொடுக்கும் தலைவர் *("ஆவோ ராஜாநம்" என்ற வேத மந்திரம் யக்ஞங்களுக்கு அரசன் என்று பரமேச்வரனைக் கூறுகிறது).* அசுவமேதம் முதல் எல்லாவிதமான யாகங்களுக்கும் பலனை யளிப்பவர் பரமேச்வரரேயாவர்; 279. யக்ஞமூர்த்திஃ — வேள்வியே வடிவானவர்; 280. அநாதுரஃ — ஆசையற்றவர்; 281. ப்ரபத்யஃ — நல்ல வழியாயிருப்பவர்; 282. கிம்ஶிலஃ — சிறு கற்களாக

இருப்பவர்; 283. கேஹ்யঃ — உப்பரிகை *(மாடி)*யிலிருப்பவர்; 284. க்ருஹ்யঃ — வீட்டில் இருப்பவர்; 285. தல்ப்யঃ — கட்டில் முதலியவற்றில் இருப்பவர்; 286. தநாகரঃ — செல்வத்துக்கு இருப்பிடமானவர்.

पुलस्त्यः क्षपणो गोष्ठ्यो गोविद्गोगीतसत्क्रियः ।
हृदय्यो हृदकृहृद्यो गह्वरेष्ठः प्रभाकरः ॥ ३० ॥

புலஸ்த்யঃ க்ஷபணோ கோ^{3}ஷ்ட்^{2}யோ
கோ^{3}வித்^{3}கோ^{4}கீ^{3}தஸத்க்ரியঃ ।
ஹ்ருத^{3}ய்யோ ஹ்ருத^{3}க்ருஹ்ருத்^{3}யோ க^{3}ஹ்வரேஷ்ட்ட^2ঃ
ப்ரபா^{4}கரঃ ॥ 30 ॥

287. புலஸ்த்யঃ — பக்தர்களைக் காக்க முன்நிற்பவர்; 288. க்ஷபணঃ — லோபியின் வடிவாகவுமிருப்பவர்; 289. கோஷ்ட்யঃ — மாட்டுக் கொட்டிலில் இருப்பவர்; 290. கோவித்ঃ — புலன் களுக்கு மேற்பட்ட அறிவாயிருப்பவர்; 291. கோகீதஸத்க்ரியঃ — பழக்கப்பட்ட நல்ல செயல்களை உடையவர், ஹாலஹாலமுண் டது, முப்புரமெரித்தது போன்ற வேதங்களால் புகழப்பட்ட சரித் திரங்களையுடையவர்; 292. ஹ்ரதய்யঃ — ஆழமான மடுக்களில் இருப்பவர்; 293. ஹ்ருதக்ருத்ঃ — ஜீவர்களின் இதய ஸ்தானத்தில் வசிப்பவர்; 294. ஹ்ருத்யঃ — மனதிற்கு இனிமையானவர்; 295. கஹ்வரேஷ்டঃ — மலையின் குகையில் இருப்பவர் *(இதய குகையில் இருப்பவர்)*; 296. ப்ரபாகரঃ — ஒளி தருபவர்.

निवेष्प्यो नियतो यन्ता पांसव्यः संप्रतापनः ।
शुष्क्यो हरित्यः पूतात्मा रजस्यः सात्त्विकप्रियः ॥ ३१ ॥

நிவேஷ்ப்யோ நியதோ யந்தா பாம்ஸவ்யঃ ஸம்ப்ரதாபநঃ ।
ஶுஷ்க்யோ ஹரித்யঃ பூதாத்மா ரஜஸ்யঃ ஸாத்த்விகப்ரியঃ ॥ 31 ॥

297. நிவேஷ்ப்யঃ — பனித் துளியில் இருப்பவர்; 298. நியதঃ — கால உருவானவர்; 299. யந்தாঃ — நடத்துபவர்; 300. பாம்

ஸவ்ய: — *மிகச் சிறிய தூசுகளில் இருப்பவர்;* 301. ஸம்ப்ரதாபந: — *மிகவும் தபிக்கச் செய்பவர்;* 302. சஷ்க்ய: — *காய்ந்த கட்டைகளில் இருப்பவர்;* 303. ஹரித்ய: — *ஈரமான பசுமையான மரங்களில் இருப்பவர்;* 304. பூதாத்மா: — *புனிதமான ஆத்மாவாக இருப்பவர்;* 305. ரஜஸ்ய: — *பெரிய தூள்களில் இருப்பவர்;* 306. ஸாத்விகப்ரிய: — *நல்ல குணமுடையவர்களான பக்தர்களிடம் மிகவும் பிரியம் உள்ளவர்.*

लोप्योऽलप्यः पर्णशद्यः पर्ण्यः पूर्णः पुरातनः ।
भूतो भूतपतिर्भूपो भूधरो भूधरायुधः ॥ ३२ ॥

லோப்யோऽலப்ய: பர்ணஶத்3ய: பர்ண்ய: பூர்ண: புராதந: ।
பூ4தோ பூ4தபதிர்பூ4போ பூ4த4ரோ பூ4த4ராயுத4: ॥ 32 ॥

307. லோப்ய: — *கெட்டியான தரையில் இருப்பவர்;* 308. அலப்ய: — *சிறிய புற்களில் இருப்பவர்;* 309. பர்ணஶத்ய: — *உலர்ந்த இலைகளின் குவியல்களில் இருப்பவர்;* 310. பர்ண்ய: — *பச்சிலைகளில் இருப்பவர்;* 311. பூர்ண: — *நிறைந்தவர்;* 312. புராதந: — *பழமையானவர்;* 313. பூத: — *ஜீவர்களாய் இருப்பவர்;* 314. பூதபதி: — *ஜீவர்களுக்குத் தலைவர்;* 315. பூப: — *அரசராயிருப்பவர்;* 316. பூதர: — பூமியைத் தாங்குபவர், இமயம் முதலிய மலைகளின் உருவாக இருப்பவர்; 317. பூதராயுத: — *மலையை வில்லாகக் கொண்டவர்.*

भूतसङ्घो भूतमूर्तिर्भूतहा भूतिभूषणः ।
मदनो मादको माद्यो मदहा मधुरप्रियः ॥ ३३ ॥

பூ4தஸங்கோ3 பூ4தமூர்த்திர்பூ4தஹா பூ4திபூ4ஷண: ।
மத3நோ மாத3கோ மாத்3யோ மத3ஹா மது4ரப்ரிய: ॥ 33 ॥

318. பூதஸங்க: — *பூதங்களின் கூட்டமாய் இருப்பவர் (ப்ரமத கணங்களை உடையவர்);* 319. பூதமூர்த்தி: — பூதங்களின்

உருவானவர் *(அக்னி, வாயு, ஜலம், ஆகாயம், பூமி என்ற ஐம் பூதங்களின் உருவானவர்)*; 320. பூதஹா — பூதங்களைக் கொல்பவர்; 321. பூதிபூஷணஃ — திருநீற்றினையே அணிகலனாகக் கொண்டவர்; 322. மதநஃ — மன்மதன் வடிவாயிருப்பவர்; 323. மாதகஃ — காமனையைக் கொடுப்பவர்; 324. மாத்யஃ — மதங் கொண்டவர் *(மதம் பிடித்தவனை அடக்குபவர்)*; 325. மதஹாஃ — கொழுப்பை அடக்குபவர்; 326. மதுரப்ரியஃ — இனிமையை விரும்புபவர்.

मधुर्मधुकरः क्रूरो मधुरो मदनान्तकः ।
निरञ्जनो निराधारो निर्लिप्तो निरुपाधिकः ॥ ३४ ॥

மது⁴ர்மது⁴கரஃ க்ரூரோ மது⁴ரோ மத³நாந்தகஃ ।
நிரஞ்ஜநோ நிராதா⁴ரோ நிர்லிப்தோ நிருபாதி⁴கஃ ॥ 34 ॥

327. மதுஃ — தேனாய் இருப்பவர்; 328. மதுகரஃ — தேன் சேர்க்கும் வண்டாக இருப்பவர்; 329. க்ரூரஃ — கடுமையானவர்; 330. மதுரஃ — இனிமையானவர்; 331. மதநாந்தகஃ — காமனை ஜயித்தவர்; 332. நிரஞ்ஜநஃ — பற்றில்லாதவர்; 333. நிராதாரஃ — ஆதாரம் அற்றவர் *(தாமே அனைத்துக்கும் ஆதாரமாயிருத்தலால் தமக்கு வேறு ஆதாரம் எதுவும் இல்லாதவர் என்பதாம்)*; 334. நிர்லிப்தஃ — ஒட்டாதவர்; 335. நிருபாதிகஃ — சேர்க்கை இல்லாதவர்.

निष्प्रपञ्चो निराकारो निरीहो निरुपद्रवः ।
सत्त्वः सत्त्वगुणोपेतः सत्त्ववित्सात्त्वतप्रियः ॥ ३५ ॥

நிஷ்ப்ரபஞ்சோ நிராகாரோ நிரீஹோ நிருபத்³ரவஃ ।
ஸத்வஃ ஸத்வகு³ணோபேதஃ ஸத்வவித்ஸாத்வதப்ரியஃ ॥ 35 ॥

336. நிஷ்ப்ரபஞ்சஃ — உலகிற்கு அப்பாற்பட்டவர்; 337. நிராகாரஃ — உருவமற்றவர்; 338. நிரீஹஃ — ஆசையற்றவர்; 339. நிருபத்ரவஃ — தொல்லைகளைப் போக்கடிப்பவர்; 340. ஸத்வஃ — ஸத்வ குணமுள்ளவர்; 341. ஸத்வ குணோபேதஃ — நல்ல

குணங்களோடு கூடியவர்; 342. ஸத்வவித்ః — நல்லனவற்றை யெல்லாம் அறிந்தவர்; 343. ஸாத்வதப்ரியః — கிருஷ்ணனிடம் பிரியமுள்ளவர் *(மஹாபாரதத்தில் அனுசாஸன பருவத்தில் பரமேச்வரன் கிருஷ்ணனுக்கு அருள் செய்த வரலாற்றைக் காணலாம். கிருஷ்ணன் வாக்கினாலேயே சிவபிரானின் ஒரு ஆயிரம் திருநாமங்கள் அங்கு கூறப்பட்டுள்ளதும் காணலாம்).*

सत्त्वनिष्ठः सत्त्वमूर्तिः सत्त्वेशः सत्त्ववित्तमः ।
समस्तजगदाधारः समस्तगुणसागरः ॥ ३६ ॥

ஸத்வநிஷ்ட்ட2ః ஸத்வமூர்த்திః ஸத்வேஶః ஸத்வவித்தமః ।
ஸமஸ்தஜக3தா3தா4ரః ஸமஸ்தகு3ணஸாக3ரః ॥ 36 ॥

344. ஸத்வநிஷ்டః — ஸத்துவ குணத்தில் ஆழ்ந்து நிலை பெற்றவர்; 345. ஸத்வ மூர்த்திః — ஸத்வ குணமே உருவானவர்; 346. ஸத்வேஶః — நற்குணங்களுக்குத் தலைவர்; 347. ஸத்வ வித்தமః — நற்குணமறிந்தவர்களில் முதன்மையானவர்; 348. ஸமஸ்த ஜகதாதாரః — எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாயிருப்ப வர்; 349. ஸமஸ்த குணஸாகரః — அனைத்து நற்குணங்களின் கட லாயிருப்பவர்.

समस्तदुःखविध्वंसी समस्तानन्दकारणः ।
रुद्राक्षमालाभरणो रुद्राक्षप्रियवत्सलः ॥ ३७ ॥

ஸமஸ்தது3ःக2வித்4வம்ஸீ ஸமஸ்தாநந்த3காரணః ।
ருத்3ராக்ஷமாலாப4ரணோ ருத்3ராக்ஷப்ரியவத்ஸலః ॥ 37 ॥

350. ஸமஸ்த துக்க வித்வம்ஸிః — எல்லாத் துன்பங்களையும் போக்கடிப்பவர்; 351. ஸமஸ்தாநந்தகாரணః — எல்லாவிதமான மகிழ்ச்சிக்கும் காரணமானவர்; 352. ருத்ராக்ஷமாலா பரணః — ருத்ராக்ஷ மாலையை ஆபரணமாகக் கொண்டவர்; 353. ருத்ராக்ஷ ப்ரியவத்ஸலः — ருத்ராக்ஷத்தில் பிரியம் உள்ளவர்களிடம் அன் புள்ளவர்.

रुद्राक्षवक्षा रुद्राक्षरूपो रुद्राक्षपक्षकः ।
विश्वेश्वरो वीरभद्रः सम्राट् दक्षमखान्तकः ॥ ३८ ॥

ருத்3ராக்ஷவக்ஷா ருத்3ராக்ஷரூபோ ருத்3ராபக்ஷகஃ ।
விஶ்வேஶ்வரோ வீரப4த்3ரஃ ஸம்ராட் த3க்ஷமகா2ந்தகஃ ॥ 38 ॥

354. ருத்ராக்ஷவக்ஷாஃ — ருத்திராக்ஷத்தை மார்பில் கொண்டவர்; 355. ருத்ராக்ஷரூபஃ — ருத்ராக்ஷமே உருவானவர் (ருத்திராக்ஷத்தையே சிவலிங்கமாகப் பாவித்துப் பூசை செய்வது உண்டு); 356. ருத்ராக்ஷபக்ஷகஃ — ருத்திராக்ஷத்தின் பக்கத்தில் இருப்பவர்; 357. விஶ்வேஶ்வரஃ — உலகத்தின் தலைவர் ("விஶ்வாதிக" என்பது வேதம்); 358. வீரபத்ரஃ — தக்ஷனது யாகத்தை அழிக்க வீரபத்திரராகியவர்; 359. ஸம்ராட்ஃ — சக்கரவர்த்தி; 360. தக்ஷமகாந்தகஃ — தக்ஷனது யாகத்தை அழித்தவர்.

विघ्नेश्वरो विघ्नकर्ता गुरुर्देशिखामणिः ।
भुजङ्गेन्द्रलसत्कण्ठो भुजङ्गाभरणप्रियः ॥ ३९ ॥

விக்4நேஶ்வரோ விக்4நகர்த்தா கு3ருர்தே3ஶிகா2மணிஃ ।
பு4ஜங்கே3ந்த்3ரலஸதாகண்ட்டோ2 பு4ஜங்கா3ப4ரணப்ரியஃ ॥39॥

361. விக்நேஶ்வரஃ — விநாயகர் வடிவாய் இருப்பவர்; 362. விக்நகர்த்தாஃ — தடைகளைச் செய்பவர்; 363. குருஃ — தக்ஷிணாமூர்த்தி வடிவில் குருவாக இருப்பவர்; 364. தேவஶிகாமணிஃ — தேவர்களுக்குத் தலையில் உள்ள மணி போன்றவர், தேவர்களுள் சிறந்தவர்; 365. புஜங்கேந்த்ரலஸத்கண்டஃ — பாம்பைக் கழுத்தில் போட்டுக் கொண்டவர்; 366. புஜங்காபரணப்ரியஃ — பாம்பை ஆபரணமாகக் கொள்வதில் பிரியம் உள்ளவர்.

भुजङ्गविलसत्कर्णो भुजङ्गवलयावृतः ।
मुनिवन्द्यो मुनिश्रेष्ठो मुनिवृन्दनिषेवितः ॥ ४० ॥

பு4ஜங்க3விலஸத்கர்ணோ பு4ஜங்க3வலயாவ்ருதஃ ।
முநிவந்த்3யோ முநிஶ்ரேஷ்டோ2 முநிவ்ருந்த3நிஷேவிதஃ ॥ 40 ॥

367. புஜங்க விலஸத் கர்ணः — பாம்பைக் காதில் *(காதணியாக)* கொண்டவர்; 368. புஜங்கவலயாவ்ருதः — பாம்புகளால் வட்டமாகச் சூழப்பட்டவர்; 369. முநிவந்த்யः — முனிவர்களால் வணங்கப்படுபவர் *(தக்ஷிணாமூர்த்தி கோலத்தில் ஸனகாதி முனிவர்களால் வணங்கப்பட்டு அவர்கட்கு ஞானத்தை உபதேசித்தவர்)*; 370. முநிஶ்ரேஷ்டः — முனிவர்களில் உயர்ந்தவர்; 371. முநிவ்ருந்தநிஷேவிதः — முனிவர்கள் கூட்டத்தால் தொழப்பட்டவர்.

मुनिहृत्पुण्डरीकस्थो मुनिसंघैकजीवनः ।
मुनिमृग्यो वेदमृग्यो मृगहस्तो मृगेश्वरः ॥ ४१ ॥

முநிஹ்ருத்புண்ட^{3}ரீகஸ்தோ^{2} முநிஸங்கை^{4}கஜீவநः ।
முநிம்ருக்^{3}யோ வேத^{3}ம்ருக்^{3}யோ ம்ருக^{3}ஹஸ்தோ
ம்ருகே^{3}ஶ்வரः ॥ 41 ॥

372. முநிஹ்ருத்புண்டரீகஸ்தः — முனிவர்களின் இதயமாகிற தாமரையில் இருப்பவர்; 373. முநிஸங்கைகஜீவநः — முனிவர்களின் கூட்டத்துக்கு ஒரே ஜீவனாய் இருப்பவர் *(அதாவது முனிவர்களின் உயிராய் இருப்பவர்)*; 374. முநிம்ருக்யः — முனிவர்களால் தேடப்படுபவர் *(துர்வாஸர், நாரதர் முதலிய முனிவர்கள்)*; 375. வேதம்ருக்யः — வேதங்களால் தேடப்படுபவர்; 376. ம்ருகஹஸ்தः — கையில் மானை உடையவர்; 377. ம்ருகேஶ்வரः — மிருகங்களின் தலைவர்.

मृगेन्द्रचर्मव्यसनो नारसिंहनिपातनः ।
मृत्युंजयो मृत्युमृत्युरपमृत्युविनाशकः ॥ ४२ ॥

